பக்கங்கள்: 12
விலை:20 ரூபா
# காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | புரட்டாதி 29 | திங்கட்கிழமை 15.10.2018 | கதிர் 343

**இனி இது ரகசியம் அல்ல!**

நேற்று இப்பத்தியில் சம்பந்தன் தொடர்பில் சில காட்டமான கருத்துகளை முன்வைத்திருந்தேன்.

தமிழ் அரசியல் கைதிகள் சம்பந்தமான விவகாரம் பெரும் அரசியல் சர்ச்சையாகி ஒருபுறம் பரபரப்பாக அடிபட, மறுபுறம் சம்பந்தனுக்கு எதி பக்கம் 02

## கைதிகள் விடுதலை, நில விடுவிப்பு, காணாமற்போனோர், அரசியல் தீர்வு விடயங்களில்

# உரிய தீர்வை அரசு உடன் தராவிடின் பட்ஜெட்டை எதிர்க்கவேண்டி வரும்

## மாவை எம்.பி. பகிரங்க எச்சரிக்கை



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 15

அரசியல் கைதிகள் விடுதலை, நிலவிடுவிப்பு, காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், இனப்பிரச்சினைக்கான தீர்வு உள்ளிட்ட விடயங்களில் அரசு காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இவை தீர்க்கப்படாவிட்டால் அரசுக்குத் தொடர்ந்தும் ஆதரவளிப்பதா, இல்லையா என்பது தொடர்பில் ஆராய்ந்து வருகிறோம். அத்துடன் பட்ஜெட்டையும் கூட்டமைப்பு எதிர்க்கவேண்டி ஏற்படலாம்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா. பக்கம் 11

## அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி நாவாந்துறையில் நேற்றுப் போராட்டம்



யாழ்ப்பாணம், ஒக். 15

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் பொது மன்னிப்பின் அடிப்படையில் குறுகிய காலப் புனர்வாழ்வு வழங்கி விடுதலை செய்ய வலியுறுத்தி யாழ்ப்பாண நகரில் கவனவீர்ப்புப் போராட்டம் பக்கம் 11

## யாழ்ப்பாணத்தில் நேற்று 41 பேர் நேற்றுக் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 16

யாழ்ப்பாணத்தில் 4 பொலிஸ் பிரிவுகளில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்ட பொலிஸ் சுற்றுக்காவல் நடவடிக்கையில் 41 பேர் கைது செய்யப்பட்டனர். 151 பேருக்கு எதிராக வீதிப் போக்குவரத்து விதி மீறல்களுக்காக சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், மானிப்பாய், சுன்னாகம் மற்றும் கோப்பாய் பொலிஸ் பிரிவுகளில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை தொடக்கம் இந்த பொலிஸ் சுற்றுக்காவல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம்பிராந்தியமூத்தபொலிஸ் கண்காணிப்பாளர் (அத்தியட்சகர்) தலைமையில் இந்த பக்கம் 11

## பதவி விலகுகிறார் பூஜித் ஜயசுந்தர புதிய ஐ.ஜி.பியாகிறார் விக்ரமசிங்க

யாழ்ப்பாணம், ஒக். 15

பொலிஸ்மாஅதிபர்பூஜித் ஜயசுந்தர அடுத்த வாரம் தனது பதவியை விட்டு விலக்கூடும் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.



பூஜித் பக்கம் 11



## சட்டி, முட்டிகளோடு வீதிக்கு இறங்குகின்றது ஜே.வி.பி.!



கொழும்பு, ஒக்.15

எரிபொருள் விலை உயர்வு, வரிச்சுமை அதிகரிப்பு உட்பட நல்லாட்சி அரசின் பொருளாதாரத் திட்டத்துக்கு எதிராக எதிர்வரும் 23 ஆம் திகதி கொழும்பில் மாபெரும் போராட்டமொன்றை ஜே.வி.பி. நடத்தவுள்ளது. பக்கம் 11

## மஹிந்த – மைத்திரி இணைந்தால் மா மரத்தில் தொங்கிச் சாவேன்!

### ரஞ்சித் டி சொய்சா சபதம்

கொழும்பு, ஒக்சு. 15

மஹிந்தவும், மைத்திரியும் இணைந்து இடைக்கால அரசு அமைப்பார்களாயின், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அலுவலகத்துக்கு முன்னால் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொள்வேன் பக்கம் 11

## மீண்டும் தலைதூக்கும் டெங்கு

### மக்களே மிக அவதானம்

கொழும்பு, ஒக்.15

நாட்டில் பல பகுதிகளிலும் மழை பெய்துவருவதால், டெங்குநோய் பரவும் அபாயமிருப்பதாக முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நுளம்புக் குடம்பிகளின் பெருக்கம் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என பூச்சியியல் தொடர்பிலான ஆய்வுகளை நடத்தும் அதிகாரிகள் பக்கம் 11

## மகனைக் காப்பாற்ற முற்பட்ட தாயை துடிதுடிக்க அடித்துக் கொன்ற கும்பல்

### யாழ்ப்பாணத்தில் நேற்று இரவு கொடூரம்

யாழ்ப்பாணம், ஒக். 15

மகனைத் தாக்க வந்தவர்களைத் தடுக்க முற்பட்ட தாயை பொல்லு, கம்பியால் அடித்துத் துடிதுடிக்கக் கொலை செய்த கொடூரச் சம்பவம் நேற்றிரவு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊரெழு மேற்கு சரஸ்வதி சனசமூக நிலைய பகுதியில் நேற்றிரவு 8 மணியளவில் இந்தக் கொடூர சம்பவம் இடம்பெற்றது.

வீட்டுக்குள் புகுந்த 8 பேர் கொண்ட கும்பல் ஒன்று இந்தக் பக்கம் 11

## பட்ஜெட்டை எதிர்க்குமா கூட்டமைப்பு? மைத்திரியை சந்தித்த பின்னரே முடிவு



கொழும்பு, ஒக். 15

அரசியல் கைதிகளின் விடுவிப்பு தொடர்பில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் எதிர்வரும் புதன் கிழமை பேச்சு நடத்தப்படும். அதன் பின்னரே, வரவு – செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிப்பதா இல்லையா என்பது தொடர்பில் நாம் முடிவெடுப்போம்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் பக்கம் 11

## உடுவில் வீடு ஒன்றுக்குள் அதிரடிப்படை சோதனை

### வாளுடன் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஒக். 15

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடுவில் பகுதியில் வீடு ஒன்றுக்குள் திடீர்ச்சோதனையை மேற்கொண்ட சிறப்பு அதிரடிப்படையினர், அங்கு வாள் ஒன்றை மீட்டுள்ளனர். அதனை மறைத்து வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இந்தத் தகவலைச் சிறப்பு அதிரடிப்படையினர் வெளி பக்கம் 11

# காணி விடுவிப்பு தொடர்பில் விரைவில் உயர் மட்ட மாநாடு

வடக்கில் இராணுவத்தினர் வசமுள்ளபொதுமக்களின்காணி களை விடுவிப்பது தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் சில தினங் களில் இடம்பெறவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதியின் செயலாளர், இராணுவ மற்றும் கடற்படை பிர தானிஉள்ளிட்டவர்களுடன், அரச துறைசார் அதிகாரிகளும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற் கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படு கின்றது.

இதேவேளை, யாழ்ப்பாணத் தில் தற்போது பாதுகாப்பு படையி னரின் கட்டுப்பாட்டிலுள்ள காணி களை விடுவிப்பது தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று நாளை நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ள இந்தக் கலந்து ரையாடலில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், முப்படைத் தளபதிகள், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, வலிகாமம் வடக் கில் உயர்பாதுகாப்பு வலயத்தில் விமான நிலைய ஓடுபாதைக்கு அருகாமையிலுள்ள பொது மக் களின் காணிகளின் ஒருபகுதி விடுவிக்கப்படவுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

238 கிராம சேவையாளர் பிரிவு கட்டுவன் காசிஅம்மன் கோயிலிற்கு அருகிலுள்ள மக்க ளின் காணிகள் தொடர்பில், உரிமையாளர்கள் அடுத்த வாரத் துக்குள் தங்கள் காணிப் பதிவை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது.

# தந்தையும் இரு மகன்களும் தெஹியத்தை விபத்தில் சாவு

தெஹியத்தகண்டிய பகுதி யில் இடம்பெற்ற வாகன விபத்தில் தந்தை மற்றும் அவரது இரு மகன்களும்உயிரிழந்தனர்.

தெஹியத்தகண்டிய லஹினியாகம பகுதியில் மோட் டார் சைக்கிள் ஒன்றும் டிப்பர் ஒன் றும் மோதிக்கொண்டதிலேயே இந்த விபத்து இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் பய ணித்த தந்தையும் அவரது 6 மற் றும் 14 வயதுடைய மகன்கள் இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் இருவர் படுகாயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பான மேல திக விசாரணைகளை தெஹியத் தகண்டிய பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

# வீதியை விட்டு விலகி ஓடிய பஸ் காட்டுக்குள் பாய்ந்தது





திருகோணலை, ஒக்.15

திருகோணமலை – வவுனியா பிரதான வீதியில் நேற்று இரவு இடம்பெற்ற விபத்தில் 4 பேர் படுகாயமடைந்துள்ளனர் எனப் பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்கள்கொழும்பு, மருதானைபகுதியைசேர்ந்தவர்கள் எனவும் தெரியவருகின்றது.

நிலாவெளி பகுதிக்கு சுற்றுலா வந்த நபர்களே விபத்தில் சிக்கி யுள்ளனர்.

திருகோணமலையில் இருந்து வேகமாக வந்து கொண்டிருந்த அவர்களின் பேருந்து வேகக் கட்டுப்பாட்டை இழந்துவீதியை விட்டு விலகியமையாலேயே விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் காயம டைந்தவர்கள் திரு கோணமலை பொது வைத்தியசாலையில்அனு மதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் விபத்து தொடர்பில்மொறவெவபொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# உயிர்கொல்லி புற்றுநோய்

உலகளவில் இரண்டாவது உயிர்க்கொல்லி நோயாக புற்றுநோய் உருவெடுத்திருக் கின்றது. இந்த ஆண்டில் மட்டும் புற்றுநோய்க்கு 96 இலட்சம் பேர் பலியாகி உள்ளனர் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

ஒரு கோடியே 80 இலட்சம் பேர் புதிதாக புற்றுநோய் பாதிப் புக்கு ஆளாகி இருக்கின்றனர் எனவும் சர்வதேச புற்றுநோய் ஆராய்ச்சி மையம் தெரிவித்துள் ளது.

21ஆம் நூற்றாண்டில் அதிக உயிரிழப்பை ஏற்படுத்தும் நோயாக புற்றுநோய் அமைந்தி ருப்பதாக உலக சுகாதார நிறு வனத்தின் ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வாழ்நாளில் 5 ஆண்களுக்கு ஒருவரும், 6 பெண்களுக்கு ஒரு பெண்ணும் புற்றுநோய் பாதிப் புக்கு ஆளாகுவார்கள் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வயதுமுதிர்ச்சி, உடல்ஆரோக் கியபாதிப்பு, இன்றைய வாழ்க்கை சூழல் போன்றவை புற்றுநோய் ஏற்படுவதற்கு காரணமாக இருக் கின்றன.

புகைப்பழக்கத்தை கைவிடு வது, முறையாக உடற்பயிற்சி செய்வது, ஆரோக்கியமான உணவு வகைகளை சாப்பிடுவது போன்றவை புற்றுநோய் அபா யத்தில் இருந்து தற்காத்துக் கொள்ள உதவும்.

பிராக்கோலி, பீன்ஸ், கேரட், பெர்ரிஸ், சிட்ரஸ் பழங்கள், மஞ் சள், தக்காளி, இஞ்சி, மீன், ஆலிவ் ஆயில், லவங்கப்பட்டை போன் றவை புற்றுநோயை காக்கும் உணவுகளாகும்.

## தேசிய விளையாட்டு விழா நிறைவு

பொலன்னறுவை மாவட் டத்தை மையப்படுத்தி 44 ஆவது தேசிய விளையாட்டு விழா கடந்த நான்கு நாள்களாக இடம்பெற் றன.

இதன் இறுதி நாள் நிகழ்வுகள் ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன தலைமையில் நேற்று (ஞாயிற் றுக்கிழமை) பொலன்னறுவை மாவட்ட விளையாட்டரங்கில் இடம் பெற்றது.

கடந்த 11ஆம் திகதி ஆரம்பிக் கப்பட்ட இந்த தேசிய விளையாட்டு விழாவில்09மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி ஆயிரத்து 543 விளையாட்டு வீர, வீராங் கனைகள் பங்கேற்றனர்.

## இனி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரான காட்டமான கருத்து வெளிப் பாடு குறித்தும் சில தரப்புகளில் பரபரப்பாகப் பேசப்பட்டதாக அறிந்தேன்.

கூட்டமைப்பு எம்.பி ஒருவர் இந்த விடயம் குறித்துப் பேசினார்.

நேற்றைய உங்கள் கருதுப் பகிர்வு, சம்பந்தனின் பேச்சுத் தொடர்பில் உங்களின் தவறான புரிதலில் கட்டி எழுப்பப்பட்டுள் ளது – என்றார் அவர்.

வன்முறையிலான ஆயுதப் போராட்டம் தவறு என்று குறை கூறி சம்பந்தன் உரையாற்ற வில்லை. மாறாக, தாங்களே (கூட்டமைப்பினரே) இந்த நிலை மைக்கும் அழிவுகளுக்கும் கார ணம் என்று தனைத் தானே குற்ற நிலைக்கு உட்படுத்தி ஆற் றிய உரை அது – என்றார் அந்த எம்.பி.

தமிழ் மக்கள் 1977 இல் மிகப் பெரிய– அபாரமான– நினைத் துப் பார்க்க முடியாத – ஒரு பெரு வெற்றியைத் தேடித் தந்தார்கள். அந்த வலிமையோடு தமிழ் மக் களின் உரிமைக்கான போராட் டத்தை சட்ட மறுப்பு இயக்கம் போன்ற முனைப்பான அறவழிப் போராட்டப் பாதையில் தாமதிக் காமல் தமிழர் விடுதலைக் கூட் டணி முன்னெடுத்திருக்க வேண் டும். அஹிம்சை வழியில் தீவிர மாகப் போராடும் மார்க்கத்தை ஆரம்பிக்காமல் மிதவாதிகளாகச் செயற்பட்டு, காலத்தை இழுத் தடித்தமையேஆயுதப் போராட் டம் தீவிரமடையக் காரணமா யிற்று– என்பதுதான் சம்பந்த னின் விளக்கம்.

தங்கள் பொறுப்பையும், மக் களின் தீர்மானத்தையும் தமிழர் விடுதலைக்கூட்டணிதெளிவாகப் புரிந்து கொண்டு, கனகாத்திர மாகச் செயற்பட்டிருந்தால் ஆயு தம் ஏந்திப் போராடும் மாற்று வழிக்குத் தமிழ் இளைஞர்கள் தள்ளப்பட்டிருக்கமாட்டார்கள் என்பதையே சம்பந்தன் குறிப் பிட்டார்.

இப்படி சம்பந்தன் குற்றப் பொறுப்பைத் தானும் சேர்ந்து ஒப்புக் கொண்டு, வெளிப்படுத்தி யமையைப் பாராட்டிய சுமந்திரன் கீழிறங்கி இப்படிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டமைக்காக அவரைத் தமது உரையில் மெச் சினார் என்பதையும் அந்த எம்.பி. எனக்குத் தெரியப்படுத்தினார்.

தாங்கள் (தமிழர் விடுதலைக் கூட்டணியினர்) அப்போது பொறுப்புணர்ந்து, செயற்பட்டிருந் தால் இன்று ஆயுதப்போராட்டமும் அழிவுகளும் இவ்வளவு தீவிரம டைந்திருக்காது என்று பொறுப் புடன் சம்பந்தன் அந்தப் பதிலை வழங்கியிருப்பாராயின் அத்தகைய குற்ற ஒப்புதலை வெளிப்படுத்தி ய சம்பந்தன் பாராட்டுக்குரியவர்.

-மின்னல் -

தேவை

பக்க வடிவமைப்பாளர்

காலைக்கதிர் பத்திரிகை நிறுவனத்துக்கு இரவு, பகல் கடமை புரியக்கூடிய பக்க வடிவமைப்பாளர்கள் தேவை.

☹ ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
☹ கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்பங்களை kalaikkathirnews@gmail.com என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.
தொலைபேசித் தொடர்புகளுக்கு – 0753153153.

காலைக்கதிர்
30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.



# மைத்திரி – மஹிந்தர் மீண்டும் குறுகிய காலத்தில் சந்திப்பு




ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், இரண்டாவது தடவையாக நீர்கொழும்பில் உள்ள விடுதி ஒன்றில் இதற்கு முந்திய ஞாயிற்றுக்கிழமை சந்தித்தனர் என்று கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றின் அரசியல் பத்தியில் கூறப்பட்டுள்ளது.

பரந்தளவிலான இடைக்காலகூட்டணி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான இரகசியப் பேச்சுக்களை நடத்திய இரண்டு நாள்களின் பின்னர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் முந்திய ஞாயிற்றுக்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

நீர்கொழும்பில் உள்ள luxury Grandeeza விடுதியில் ஒரு திருமண நிகழ்விலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

அப்போது, விடயங்கள் தவறாகிவிட்டன இல்லையா, என்று மைத்திரிபால சிறிசேனவை மஹிந்த ராஜபக்ஷ புன்னகையுடன் வரவேற்றார். அதற்கு மைத்திரிபால சிறிசேனவும், அப்படித் தான் என்று கூறினார்.

மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மீரிகம அமைப்பாளர் சஞ்சய சிறிவர்த்தனவின் மகளுக்கும், மஹிந்த ராஜபக்ஷவை நிழல் தலைவராகக் கொண்ட சிறிலங்கா பொதுஜன முன்னணியின் மேல் மாகாணசபை உறுப்பினர் சந்தியா சிறிவர்த்தனவின் மகனுக்குமே திருமணம் இடம்பெற்றது.

இந்தத் திருமணத்துக்கு வேடர் சமூகத்தின் தலைவர் உருவரிகே வன்னிலா அத்தோவும் அழைக்கப்பட்டிருந்தார். முதன்மை மேசையில் அவருக்கும் ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்தது. மைத்திரிபால சிறிசேன மற்றும் மஹிந்த ராஜபக்ஷவின் தனிப்பட்ட பாதுகாவலர்களின் கவனம், வேடுவர் தலைவரின் மீதே இருந்தது. அவர் தமது பாரம்பரிய முறைப்படி தமது கோடரியைத் தமது தோளில் கொழுவியிருந்தார்.

இதனால், அவரையே ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினர் கண்காணித்தபடி இருந்தனர் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

# மன்னிப்பு என்றால் அது இரு தரப்புகளுக்கும்தான்; போராளிகளுக்கு என மட்டும் கேட்பது சரிவராது!

## கூட்டமைப்பின் முன்னால் எம்.பி பியசேன கூறுகிறார்

அக்கரைப்பற்று, ஒக்.15

கடந்த கால யுத்தத்தில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டும், அதன் ஊடாகவே தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வென்றெடுக்க முடியும் என்று முன்னாள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அம்பாறை மாவட்ட அமைப்பாளருமான பொடியப்பு பியசேன தெரிவித்தார்.

நாவிதன்வெளியை சேர்ந்த இளையோர்களை தமது அக்கரைப்பற்று அலுவலகத்தில் நேற்று. முன்தினம் சனிக்கிழமை காலை சந்தித்து பேசியபோதே பியசேன இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யுத்தத்தில் எந்த தரப்பும் பூ பறித்துகொண்டு இருப்பதில்லை. ஆகவே இராணுவத்தை தண்டிக்க வேண்டும், முன்னாள் புலிகளை மன்னிக்க வேண்டும் என்று தமிழர்கள் கோண்டிருக்கின்ற நிலைப்பாடு தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஒருபோதும் விடுதலையைப் பெற்று தராது என்பதே யதார்த்தமான நிலைவரம் ஆகும்.

ஆகவேதான் இராணுவம் போர் குற்றங்களுக்காக தண்டிக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் வரை சென்று குரல் கொடுக்கின்ற சம நேரத்தில் உள்நாட்டில் முன்னாள் புலிகளுக்கு பொது மன்னிப்பு கொடுக்க வேண்டும் என்று தமிழர்கள் கோருவது முற்றிலும் அர்த்தம் அற்றவிடயம் என்று நாம் அழுத்தி கூறுகின்றோம்.

ஏனென்றால் அரச படைகள் தண்டனை பெற்று உள்ளே செல்வதையும், போராளிகள் மன்னிப்பு பெற்று வெளியே வருவதையும் எந்த அரசும் கற்பனையில்கூட அனுமதிக்க மாட்டாது.

நாட்டுக்காகப் போராடிய இராணுவத்தை கதாநாயகர்களாகவே அரசாங்கமும், பெரும்பான்மை சமூகமும் பார்க்கின்றன. தனிநாட்டுக்காகப் போராடிய விடுதலை புலிகளை அரசாங்கமும், பெரும்பான்மை சமூகமும் மாத்திரம் அன்றி சர்வதேசமும் பயங்கரவாதிகளாகவே பார்க்கின்றன. எனவே தமிழ் அரசியல் கைதிகள் என்கிற மாயாஜால வார்த்தைப் பிரயோகம் முன்னாள் புலிகளுக்குள் எந்தவிமோசனத்தையும் பெற்றுத் தராது.

மறப்போம், மன்னிப்போம் என்கிற பரந்து விரிந்த கோட்பாட்டை தமிழர் தரப்பு வரித்து கொள்ள வேண்டும். அதன் மூலமாகவே தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வென்றெடுக்க முடியும். மாறாக, பிச்சைக்காரனின் புண்ணைப்போல பிரச்சினையை நீடிக்க வைத்து கொண்டு அரசியல் செய்கின்ற தமிழ் தேசிய தலைமைகளின் வழிமுறை மூலமாக தமிழ் அரசியல் கைதிகளுக்கான விடுதலை கிடைக்க போவதே இல்லை.

# உண்ணாவிரதத்தை நிறுத்துவதா, இல்லையா என்பது குறித்து அரசியல் கைதிகளுடன் அதிக நேரம் பேசவில்லையாம் மாவை

## செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அவரே நேற்றுத் தகவல்

யாழ்ப்பாணம், ஒக்.15

தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதத்தை நிறுத்துவதா, இல்லையா என்பது குறித்து அவர்களுடன் நான் அதிகநேரம் பேசவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார் என்று செய்தி நிறுவனம் ஒன்று நேற்றுத் தகவல் வெளியிட்டது.

அநுராதபுரத்தில் உண்ணாவிரதம் இருந்த அரசியல்கைதிகளைச் சந்தித்து பேசிய விடயங்கள் குறித்து கேட்டபோதே நேற்று (ஞாயிற்றுக் கிழமை) மேற்படி செய்திச் சேவைக்கு அவர் இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மற்றும் சுமந்திரன் கைதிகள் தொடர்பாக ஜனாதிபதியுடன் பேசிய விடயங்களை கைதிகளிடம் தெரிவித்து முதலில் அவர்களது அபிப்பிராயங்களை அறிந்துகொண்டோம்.

அதன் அடுத்தக்கட்டமாக எதிர்வரும் 17 ஆம் திகதி 5 மணிக்கு ஜனாதிபதியுடனும், பிரதமருடனும், சட்டமா அதிபருடனும் பேசி முடிவை எடுக்க வுள்ளோம்.

உண்ணாவிரதம் இருக்கும் அரசியல் கைதிகளுக்கு இந்த விடயங்களைச் சொல்ல வேண்டிய பொறுப்பு எங்களுக்கு இருந்தது. ஆகையால் அவர்களிடம் நாங்கள் இந்த கருத்தை சொல்லியிருக்கின்றோம்.

ஆனால் கைதிகளுடன், உண்ணாவிரதத்தை நிறுத்துவதா, இல்லையா என்பதைப் பற்றி நாங்கள் அதிகநேரம் பேசவில்லை.

அவர்களது விடயங்களை அறிந்த பின் 17 ஆம் திகதி சந்திப்பு முடிய அந்த சந்திப்பில் எடுக்கப்படும் முடிவுகளுடன் அடுத்த நாள் வந்து பேசுவதாகத் தான் நான் சொல்லியிருக்கின்றேன் – என அவர் மேலும் குறிப்பிட்டார்.

மாவை சேனாதிராஜா அளித்த சில உறுதிமொழிகளின் பேரிலேயே மேற்படி உண்ணாவிரதப் போராட்டத்தைத் தற்காலிகமாகக் கைவிடுவதற்குக் கைதிகள் இணங்கினர் என ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# அடிக்கடி ஒரே சமயத்தில் நாட்டை விட்டு வெளியே பறக்கும் ஜனாதிபதி, பிரதமர்!

## தேசத்துக்குப் பொறுப்பாக யாரும் இல்லாத நிலையாம்

இலங்கையின் ஜனாதிபதியும் பிரதமரும், ஒரே நேரத்தில் வெளிநாடு சென்றிருந்தமையால், கடந்தவாரம் ஒரு நாள் முழுவதும், இலங்கையின் இரண்டு கோடி மக்களுக்கும் பொறுப்பேற்கும் நிலையில் எவரும் இருக்கவில்லை என்று கொழும்பு ஆங்கில ஏடு ஒன்று தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சீஷெல்ஸ் சென்றிருந்தார்.

அதற்கு முன்னதாகவே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நோர்வே மற்றும் பிரித்தானியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார்.

இதனால், ஒரு நாள் இலங்கையின் இரண்டு கோடிக்கும் அதிகமான மக்களுக்குப் பொறுப்பான தலைவர்கள் யாரும் இல்லாத நிலை காணப்பட்டது.

இலங்கையில் ஜனாதிபதி, பிரதமருக்கு அடுத்து அதிகார வரிசையில் மூன்றாவது இடத்தில் இருப்பவர் சபாநாயகர் ஆவார். எனினும், சபாநாயகர் கரு ஜெயசூரியவிடம், நாட்டைக் கவனித்துக் கொள்ளுமாறு கூறப்படவில்லை.

இதுபோன்ற நிலைமைகள் அடுத்த சில நாள்களிலும் ஏற்படலாம் என்று தெரிகிறது.

# இலங்கையில் பொதுப் போக்குவரத்தில் 90வீதப்பெண்கள் பாலியல் தொந்தரவுகளுக்கு ஆளாகின்றனர்

கொழும்பு, ஒக்.15

இலங்கையில் பொது போக்குவரத்தின் போது, பெண்களில் 90 வீதமானவர்கள் பாலியல் தொந்தரவுகளுக்கு உள்ளாகின்றனர் என ஐ.நா சனத்தொகை நிதியம் புதிதாக மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது. இந்த ஆய்வு தொடர்பான அறிக்கையை ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் கடந்த வாரம் வெளியிட்டுள்ளது.

வன்முறை, வேறுபாடுகளுக்குள்ளாவது, வறுமை என்பதால் புரிந்து கொள்ளப்பட்ட பிரச்சினைகள், இலங்கையைப் போலவே உலக நாடுகளிலும் பெண்கள் பாலியல் ரீதியான பாதிப்புகளை எதிர் நோக்கி வருகின்றனர். இந்த விடயம் தொடர்பில் போதுமான தரவுகள் இல்லை. எனினும் இந்தப் பிரச்சினைகள் பெண்கள் மற்றும் சிறிய பெண் பிள்ளைகளுக்கு மிகவும் பரிச்சயமானவை என்பதும் ஆய்வில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பல சந்தர்ப்பங்களில் ஆண் பயணிகள் சிறிய பெண் பிள்ளைகளை தொடுவது, அவர்கள் மீது சாய்ந்து கொண்டிருப்பது போன்றவற்றைத் தான் நேரில் பார்த்திருக்கிறார் என 23 வயதான வருணி மானேல் தெரிவித்துள்ளார். பேருந்து நடத்துநர்களும் சிறிய பெண் பிள்ளைகளைப் பேருந்தில் ஏற்றும் போது தேவையற்ற வகையில் தொடுவதையும் பார்த்துள்ளேன் எனவும் அவர் கூறியுள்ளார்.

பெண்கள் மற்றும் சிறிய பெண் பிள்ளைகள் கல்வி கற்கும் இடங்கள், தொழில் புரியும் இடங்கள், வசிக்கும் இடங்கள் வரை இந்தத் தொந்தரவுகள் இருக்கின்றன என ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆய்வில் 15 வயது முதல் 35 வயதான 2500 பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் உட்படுத்தப்பட்டுள்ளனர். நேர்காணல்கள், கேள்விகள் மூலம் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இலங்கையில் உள்ள 9 மாகாணங்களில் இருக்கும் அனைத்து மாவட்டங்களிலும் இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

பொது போக்குவரத்து சாதனங்களிலேயே பெண்கள் பாலியல் தொந்தரவுக்கு உள்ளாகும் அதிகளவான அனுபவத்தை கொண்டுள்ளனர். வாய்மொழி மூலமான ஆபாசமான அவமதிப்புக்கு உள்ளாக்கப்படுவது, தன்னிச்சையான தொடுகை, இவற்றில் உடல் ரீதியான பாலியல் தொந்தரவுகளே அதிகம். 74 வீதமான பெண்கள் மற்றும் சிறிய பெண் பிள்ளைகள் தாம் வேண்டுமென்றே பாலியல் ரீதியான தொடுகைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர் எனக் கூறியுள்ளனர்.

ஆண்களே தம்மை இவ்வாறான பாலியல் தொந்தரவுகளுக்கு உள்ளாக்கினர் என 90 வீதமான பெண்கள் தெரிவித்துள்ளனர். இதனால் தமக்கு ஏற்படும் அவமானம் மற்றும் அச்சம் குறித்து ஆய்வின் போது பெண்கள் விவரித்துள்ளனர் எனவும் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

# அரசியல் கைதிகள் விடயத்தில் தனிப்பட்ட அரசியல் வேண்டாம்

தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தைக் கையாள்வதில் வெளித் தரப்புகள் மிக அவதானமாக இருக்க வேண்டும்.

இப்போது நமது அரசியல் கைதிகளை விடுவிக்கும் விவகாரத்தை சிவில் சமூகத்தவர்கள் கையில் எடுத்திருக்கின்றனர் என ஒரு தரப்பினர் கூறுகின்றனர்.

வடக்கு முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனோ தமது அலுவலகத்தில் தனியான கூட்டம் நடத்தி சில ஏற்பாடுகளை முன்னெடுக்கின்றார்.

நமது யாழ். பல்கலைக்கழக இளம் இரத்தங்கள் தமக்கேயுரிய உணர்வோடும் எழுச்சியோடும் இந்த விவகாரத்தை சர்வதேச மயப்படுத்தி, இந்தக் கைதிகளின் தீனக்குரலை – அவல நிலைமையை – சகலரதும் காதுகளில் எட்டும்படி காத்திரமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

அதேசமயம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தனியாகக் கைதிகளைச் சந்தித்து சில நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அவர்கள் தரப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும், பேச்சாளர் சுமந்திரனும் ஜனாதிபதி, பிரதமர் முதல் கொண்டு நீதியமைச்சர், சட்டமா அதிபர் ஈறாகப் பல தரப்புகளுடனும் பேசி வருகின்றனர். தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நிற்கின்றனர்.

அதேசமயம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான அமைப்புப் போன்றவையும் வெகுஜனப் போராட்டங்களை ஏற்பாடு செய்து நடத்துவதிலிருந்து பல்வேறு பயன்தரு – அழுத்தம் தரு – நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.

அந்தவகையில் நமக்காகப் போராடிய நமது உடன்பிறப்புக்களை விடுவிக்க, தமிழ்த் தரப்புகள் எல்லாம் தத்தம் வழியில் காத்திரமாகப் பணியாற்ற முயற்சிப்பது திருப்தி தரும் விடயமே.

ஆனாலும் 'Too many cooks spoil the soup' என்றொரு பழமொழி நம்மத்தியில் உண்டு என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

பல சமையற்காரர்கள் சேர்ந்தால் சூப் தயாரிப்புப் பிழைத்து விடும் என்பதுதான் அதன் அர்த்தம்.

நமது அரசியல் கைதிகளோ சிறைக்குள். எங்களுக்கான விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த அவர்கள் இன்று, தமக்காகத் தாங்களே போராட வேண்டிய அபத்த நிலைமை.

சிறைக்குள் இருக்கும் அவர்களோடு நினைத்த நேரத்தில் எல்லோரும் தொடர்பு கொள்ள முடியாது. அதனை வசதியாகப் பயன்படுத்தி, இந்த விடயத்தில் சில தரப்புகள் தமது தந்திரோபாயத்தைக் காட்டி, சுயநல அரசியல் செய்யவோ, தனிப்பட்ட அரசியல் காழ்ப்புணர்வுகள், பகைமைகள், கோபதாபங்களைத் தீர்த்துக் கொள்ளவோ அனுமதிக்கக்கூடாது. அப்படிச் செய்வது மிகக் கேவலமாகும்.

இப்போதும் கூட அரசியல் கைதிகள் தமது உண்ணாவிரதத்தைக் கைவிட்டமை மாவை சேனாதிராசா எம்.பி. அளித்த வாக்குறுதியின் பெயரிலா என்ற சர்ச்சை எழுந்திருக்கின்றது.

இத்தகைய இழுபறி பற்றிய விடயங்களை அறியும் போது சிறைக்குள் தமக்காகத் தாமே பசித்திருந்து போராடும் அந்தக் கைதிகளின் மனநிலை எப்படி இருக்கும் என நினைத்துப் பார்க்கிறோம்.

கைதிகளை விடுவிக்கும் அரசியல் தீர்மானத்தை எடுக்க வேண்டியவர் ஜனாதிபதி. அவருக்குத்தான் அந்த அதிகாரம் முழுவதும் உள்ளது.

ஆனால், அவரோ கூட்டு எதிரணியுடன் சேர்ந்து ரணிலின் அரசை – கவிழ்க்க – அதுவும் பட்ஜெட் வாக்கெடுப்பின் போது வீழ்த்த – சந்தர்ப்பம் பார்த்துக் காத்திருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

பிரதமர் ரணிலை தாம் நினைத்த நேரத்தில் வீட்டுக்கு அனுப்புவதற்குத் தமக்கு அதிகாரம் இல்லை என்ற யதார்த்தத்தைப் புரிந்து கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வரவு – செலவுத் திட்ட வாக்கெடுப்பில் ரணிலின் அரசைக் கவிழ்த்து வீட்டுக்கு அனுப்பும் வாய்ப்புக்குப் பார்த்திருக்கிறார் என்பது ஊகிக்கப்படக்கூடியதே.

இந்தச் சந்தர்ப்பத்தில் போய், அரசியல் கைதிகளை விடுவிக்காவிட்டால் பட்ஜெட்டை எதிர்த்து வாக்களித்து, ரணில் அரசை வீழ்த்துவோம் என்று நிபந்தனை போட்டு அறிவித்தால், அது நமக்கு நாமே Same side goal அடிப்பதாகிவிடாதா?

எப்படியாயினும், இந்த 109 கைதிகளையும் விடுவிப்பது தான் நமது இலக்காக இருக்க வேண்டும். கூட்டமைப்பைச் சிக்கலில் மாட்டி வைப்பதற்கான தந்திரோபாய வாய்ப்பாகக் கைதிகளின் விடயத்தை சில அரசியல் தரப்புகள் பாவிக்க முயல்கின்றனவோ என்ற சந்தேகம் சில தரப்புகளுக்கு எழாமல் இல்லை.

சில தரப்புகள் 'அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிப்பது போல' இவ்விடயத்தில் காரியமாற்றுகின்றமையைப் பார்க்கும்போது அத்தகைய சந்தேகம் வரத்தானே செய்யும்?

தயவுசெய்து நமது தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் அரசியல் செய்யாதீர்கள்; தனிப்பட்ட விருப்பு, வெறுப்புக்களைத் திணிக்காதீர்கள். தயவாகக் கேட்பதும் சுட்டிக்காட்டுவதும் நமது கடமை. அதனைச் செய்துள்ளோம்.

# நல்லாட்சிக்கு ஒரு போதும் துரோகம் இழைக்கவே மாட்டாராம் ஜனாதிபதி

## ஐ.தே.கட்சியின் முஜிபுர் ரஹ்மான் எம்.பி. நம்பிக்கை

கொழும்பு,ஒக்.15

நல்லாட்சி அரசுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு போதும் துரோகம் இழைக்கமாட்டார் என ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

விரைவில் இடைக்கால அரசாங்கம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக வெளியாகியுள்ள தகவல்கள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதேஐக்கியதேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அவர் –

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2015ஆம் ஆண்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளார்.

சகோதரர்களின் கருத்துக்களைக் கேட்டு நாட்டு மக்களுக்கும் கூட்டாட்சிக்கும் ஜனாதிபதி துரோகம் இழைக்க மாட்டார்.

அத்துடன், மாற்று அரசாங்கத்தை உருவாக்குவதாகக் கூறி கூட்டு எதிரணி நடத்தும் இரகசிய சந்திப்புகள் தேசிய அரசாங்கத்தை பாதிக்கப் போவதில்லை.

கூட்டு எதிரணி விதிக்கும் நிபந்தனைகளின் அடிப்படையில் செயற்படுவதற்கான அவசியமும் தேசிய அரசாங்கத்துக்கு இல்லை. – எனத் தெரிவித்துள்ளார்.

# கொட்டகலைத் தோட்டத் தொழிலாளர்கள் நியாய சம்பள உயர்வு கோரி ஆர்ப்பாட்டம்





கொட்டகலை,ஒக்.15

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளம் கோரி கொட்டகலை, டிரேட்டன் தோட்ட தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

கொட்டகலைபிரதேசசபைக்கு முன்பாக நேற்று முன்தினம் (சனிக்கிழமை) இந்த ஆர்ப்பாட்டம் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

கோஷங்களைஎழுப்பியவாறு, பதாதைகளை ஏந்தியவண்ணம் இந்த ஆர்ப்பாட்டத்தை சுமார் ஒரு மணித்தியாலம் அவர்கள்நடத்தினர்.

உரிய முறையில் முதலாளிமார் சம்மேளனத்துடன், தொழிற் சங்கங்கள் பேச்சு நடத்தி பண்டிகைக் காலத்திற்கு முன்பதாகத் தோட்ட தொழிலாளர்களுக்கு இம் முறை நியாயமான சம்பளத்தைப் பெற்று தரவேண்டுமெனவும், தமக்கு ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளத்தை வழங்க வேண்டுமெனவும்ஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்ட தோட்டத் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது சுமார் 350ற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மலையகத் தோட்டத் தொழிலாளர் சம்பளம்: கூட்டு ஒப்பந்த மூன்றாம் கட்டப் பேச்சு இன்று

கொழும்பு,ஒக்.15

பெருந்தோட்டத் தொழிலாளர்களின்சம்பளத்தை நிர்ணயிக்கும் கூட்டு ஒப்பந்தத்தின் மூன்றாம் கட்டப்பேச்சு இன்று (திங்கட்கிழமை) இடம்பெறவுள்ளது.

இராஜகிரியவில் அமைந்துள்ளமுதலாளிமார்சம்மேளனத்தில் இந்த பேச்சு இடம்பெறவுள்ளது.

இந்த பேச்சில் இலங்கைத் தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் கூட்டு கமிட்டி சங்கம் ஆகிய தொழிற்சங்கங்கள் கலந்து கொள்ளவுள்ளன.

கடந்த 9ஆம்திகதி இடம்பெற்ற இரண்டாம் கட்ட பேச்சில் அடிப்படைச்சம்பளத்தை 15 வீதத்தால் அதிகரிப்பதாக முதலாளிமார் சம்மேளனத்தால் இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் அதற்கு தொழிற் சங்கங்கள் எதிர்ப்பு தெரிவித்தமையைத் தொடர்ந்து பேச்சு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, மலையக மக்களின் சம்பளம் உள்ளிட்ட அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வாக இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை கைச்சாத்திடப்பட்டு வரும் கூட்டு ஒப்பந்தத்தின் கால எல்லை நேற்றுடன் நிறைவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அரிசி விலை கிலோ பத்து ரூபாவால் குறையும்?

## அமைச்சர் அமரவீர நம்பிக்கை

கொழும்பு,ஒக்.15

ஒரு கிலோ அரிசியின் விலையை 10 ரூபாவினால் குறைப்பதற்கு அரிசி உற்பத்தியாளர்கள் சங்கம் சம்மதம் தெரிவித்துள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அரிசி விலையைக் கட்டுப்படுத்துவதற்காக' இடம்பெற்ற கலந்துரையாடல்ஒன்றின்போதே இவ்வாறு சம்மதம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அரிசிப் பொதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள விலையை விட 10 ரூபா குறைத்து வழங்குவதற்கும் அவர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

# நல்லாட்சி அரசிலிருந்து வெளியேற சு.கவின் 20 எம்.பிக்கள் எதிர்ப்பாம்

கொழும்பு,ஒக்.15

ஸ்ரீ ல.சு.க.யின் சார்பில் நல்லாட்சி அரசில் இடம்பெற்றிருக்கும் இருபது எம்.பிக்கள் கூட்டரசாங்கத்திலிருந்து விலக மறுப்புத் தெரிவித்து வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

தேசிய அரசாங்கத்திலிருந்து விலகவேண்டாமென அரசாங்கத்திலுள்ள சுதந்திரக் கட்சியின் இக்குழுவலியுறுத்துகின்றமையோடு அக்கட்சியின் உள்மட்டத்தில் கருத்து மாற்றமொன்றைக் கொண்டு செல்வதனால், இடைக்கால அரசாங்கம் எனும் யோசனை நடைமுறைச் சாத்தியமற்றதாக மாறியுள்ளது. என அரசியல் வட்டாரங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

சுதந்திரக் கட்சியிலுள்ள இந்த இருபது பேர் குழு மஹிந்த ராஜபக்ஷ தரப்புடன் கூட்டுச் சேரக் கூடாது என்ற யோசனையை முன்வைத்துள்ளதனால் இந்த நிலைமை உருவாகியுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

# நாளை

16.10.2018
செவ்வாய்க்கிழமை

நட்சத்திரம்: பூராடம் மு.இ 8.31 வரை
திதி : ஸ்ப்தமி மு.ப. 11.52 வரை
சுபநேரம் : 10.32 - 12.02 வரை
இராகுகாலம் : 03.02 – 04.32 வரை

# யுத்தத்தில் 40 ஆயிரம் பொது மக்கள் சாவு என்ற கதையை முதலில் அவிழ்த்து விட்டவர் ரணில் விக்கிரமசிங்கதானாம்!

## சீறுகின்றார் சிங்களத் தேசியவாதச் செயற்பாட்டாளர் சன்ன ஜயசுமன

கொழும்பு, ஒக்.15

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கப் படையினருக்கும் இடையிலான போரின் போது 40,000 பொதுமக்கள் வடக்கில் கொல்லப்பட்டனர் என முதன் முதலாகக்கூறியவர்தற்போதைய பிரதமர்ரணில்விக்கிரமசிங்கதான் என்று ரஜரட்ட பல்கலைக்கழக பேராசிரியரும், சிங்கள தேசிய வாத செயற்பாட்டாளருமான சன்ன ஜயசுமன குற்றச்சாட்டு சுமத்தியுள்ளார்.

அண்மையில் நாம் ஜெனீவா சென்று புலம்பெயர் தமிழர்களுடன் வாத விவாதங்களில் ஈடுபட்டிருந்தோம். அதன் போது 40,000 பேர் உயிரிழந்தார்கள் என நீங்கள் எப்படிக் கூறுகின்றீர்கள் என தமிழ் புலம்பெயர் செயற்பாட்டாளர் ஒருவரிடம் வினவினோம். சாட்சியம் உண்டா எனநாம்வினவினோம்? அதற்கு அவர் பதிலளிக்கையில், உங்களது நாட்டில் இவர்தான் முதலில் இது பற்றி கூறினார் என பதலளித்தார்.

நான் நாடு திரும்பியதும் இந்த நாற்பதாயிரம் பேர் உயிரிழந்த கதையை முதலில் யார் கூறினார்கள் என இரண்டு வாரங்களாக தேடிப் பார்த்தேன். இந்த தகவலை முதலில் கூறியது யார் தெரியுமா? வேறு யாருமல்லர். தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே இதனை கூறியுள்ளார்.

2008ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ரணில், இதனைத் தெரிவித்துள்ளார். கிழக்கை மீட்டு, வடக்கை மீட்கும் போர் ஆரம்பிக்கப்பட்ட போது நடைபெற்ற உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கூறியுள்ளார்.

கொழும்பில் உள்ள தூதரகமொன்று (அமெரிக்கத் தூதரகம்) தனது தாய் நாட்டுக்கு கேபிள் செய்தியொன்றை அனுப்பியுள்ளது. விக்கிலீக்ஸில் இந்த தகவல் காணப்படுகின்றது, நாற்பதாயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மதிப்பீடு செய்து குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாற்பதாயிரம் என்ற தகவலை எடுத்துக் கொண்டே தருஸ்மான் தனது அறிக்கையைத் தயாரித்தார். வேலியே பயிரை மேய்ந்தால் யாரிடம் சொல்லுவது? இந்த நாட்டின் அப்பாவி மக்களுக்கு இந்த ஆவணம் பற்றிய புரிதல் இருக்க வாய்ப்புக் கிடையாது. இவ்வாறான உடன்படிக்கைகள், ஆவணங்களிலிருந்து நாட்டை பாதுகாக்கக் கூடிய தலைவர் ஒருவரின் அவசியம் வெகுவாக எழுந்துள்ளது. – எனப்பேராசிரியர்சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு குறித்து ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பேச்சு?

கொழும்பு, ஒக்.15

அடுத்த ஆண்டு இறுதியில் நடக்கவுள்ள அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் யாரை வேட்பாளராகக் களமிறக்குவது என்பது குறித்து கட்சிக்குள் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பிரமுகர்கள் இது குறித்த பேச்சுகளை ஆரம்பித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஐந்து அமைச்சர்கள் இது தொடர்பில் அண்மையில் முக்கிய அமைச்சர் ஒருவரின் வீட்டில் பேச்சு நடத்தியுள்ளனர். சபாநாயகர் கரு ஜயசூரிய அல்லது வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாசவை கட்சியின் வேட்பாளராக நியமிப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியை விட்டுச் சென்ற கெஹலிய ரம்புக்வெல்ல, திஸ்ஸ அத்தநாயக்க போன்றோரின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொண்டு வேட்பாளரைத் தெரிவு செய்து களமிறக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வவுனியாவில் பேருந்துக்குள் கேரளா கஞ்சா மீட்பு



வவுனியா நொச்சிமோட்டை பாலத்திற்கு அருகே இன்று நேற்றுக் காலை 5.45மணியளவில் பேருந்துக்குள்ளிருந்து கேரளா கஞ்சாவைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி நோக்கி பயணித்த பேருந்தில் கஞ்சா கடத்தப்படுவதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கிணங்க வவுனியா நொச்சிமோட்டை பாலத்திற்கு அருகே குறித்த பேருந்தினை பொலிஸார் சோதனையிட்ட சமயத்தில் பையினுள் பொதி செய்யப்பட்டிருந்த 9 கிலோ கிராம் கேரளா கஞ்சாவைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். எனினும் சந்தேகநபர் எவரும் கைது செய்யப்படவில்லை.

கேரளா கஞ்சாவை பேருந்தில் வைத்த நபர் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் அவற்றை ஒப்படைக்கவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (100)

## பயணம் ஜனாதிபதி சீனாவுக்கு பிரதமர் இந்தியாவுக்கு



கொழும்பு, ஒக்.15

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சீனாவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கும் பயணங்களை மேற்கொள்ளவுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடுத்து வரும் தினங்களில் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

திருமண நிகழ்வு ஒன்றில் பங்கேற்பதற்காக, தனிப்பட்ட பயணமாகவே அவர் இந்தியா செல்லவுள்ளார் என்று கூறப்படுகின்ற போதிலும், இந்தப் பயணத்தின் போது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. பெரும்பாலும் அடுத்த வியாழனன்று இந்தச் சந்திப்பு இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, இந்தவாரம் போலந்துக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அங்கிருந்து கொழும்பு திரும்பிய பின்னர் சீனாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

அடுத்த மாதம் முதல் வாரத்தில் அவர் சீனாவுக்குப் பயணமாவார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் எதிர்வரும் நவம்பர் 05ஆம் நாள் வரவு – செலவுத் திட்ட உரையின் போது அவர் நாடாளுமன்றத்துக்கு வர முடியாத நிலை ஏற்படலாம் என்றும் கூறப்படுகிறது.

# யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்கள் ஊடாக அபிவிருத்தியை முன்னெடுப்பாராம் டக்ளஸ்







யாழ்ப்பாணம், ஒக்.15

மத்தியில் யார் ஆட்சிக்கு வருகின்றார்களோ அவர்களுக்கு ஊடாக எமது மக்களின் நலன்சார்ந்த விடயங்கள் மட்டுமல்லாது அபிவிருத்திகளையும் எம்மால் முன்னெடுக்க முடியும் என்பதை கடந்த காலமும் நிகழ்காலமும் பதிவு செய்திருக்கின்றது என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற மாவட்ட நிர்வாக பொறுப்பாளர்கள், பிரதேச பொறுப்பாளர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களுடனான கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் –

மத்தியில் யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்களைக்கொண்டு மக்கள் நலன்சார் செயற்றிட்டங்களை நாம் முன்னெடுக்க வேண்டுமானால் மக்கள் எமக்கான ஆதரவையும் அதிகாரத்தையும் தரவேண்டும். அவ்வாறாக மக்கள் எமக்கான அரசியல் அதிகாரத்தையும் ஆதரவையும் தருவார்களேயானால் நாம் எதனையும் எப்போதும் சாதிக்க முடியும்.

இந்த வரலாற்றை கடந்த காலங்களில் கிடைக்கப்பெற்ற வாய்ப்புகள் சந்தர்ப்பங்களூடாக நாம் செயற்படுத்திக் காட்டியுள்ளோம்.

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தல்களிலும் சரி நாடாளுமன்ற தேர்தலிலும் சரி மக்கள் சரியானவர்களை தெரிவுசெய்து கொள்ளாமையின் விளைவுகளை மக்கள் தற்போது உணர்ந்து வருகின்றார்கள் என்பது நிதர்சனமானது.

கடந்த காலங்களில் உசுப்பேற்றல் அரசியலை முன்னெடுத்தவர்கள் இதுவரையில் மக்களுக்காக எதனைச் செய்துள்ளார்கள் என்பது தொடர்பிலே இப்போது மக்களுக்கு நன்கு புலப்பட்டுள்ளது.

அது பிரதேச சபைகளாக இருக்கட்டும் வடக்கு மாகாணசபையாக இருக்கட்டும் எதுவாக இருப்பினும் அவை சரியான முறையில் செயற்படுத்தப்படவில்லை என்பதே வெளிப்படையான விடயம். – என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir



# சோமாலியாவில் அடுத்தடுத்து தற்கொலைத் தாக்குதல்கள்

## 14 பேர் சாவு; 20பேர் காயம்



மொகடிஷு,ஒக்.15

சோமாலியாவில் ஹோட்டல்களைக் குறிவைத்து அடுத்தடுத்து நிகழ்த்தப்பட்ட தற்கொலைப் படைத் தாக்குதகளி 14 பேர் உயிரிழந்தனர்.

சோமாலியா நாட்டின் தென்மேற்கு பகுதியில் உள்ள பே பிராந்தியத்தில் நேற்று முன்தினம் தற்கொலைப்படைத் தீவிரவாதிகள் இரண்டு இடங்களில் தாக்குதல் நடத்தினர். பாய்டோவா நகரில் உள்ள பிலன் ஹோட்டல் மற்றும் பத்ரி ஹோட்டலுக்குள் திடீரெனப் புகுந்த தற்கொலைப்படைத் தீவிரவாதிகள் தங்கள் உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தனர்.

இந்த தாக்குதலில் 14 பேர் உயிரிழந்தனர். 20 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் ஹோட்டலுக்கு சாப்பிட வந்த பொதுமக்கள் ஆவர்.

இந்த தாக்குதலுக்கு அல்-பாப் பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. இந்த அமைப்பு, சோமாலியாவிலும் கிழக்கு ஆப்பிரிக்காவின் சில பகுதிகளிலும் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகிறது.

சோமாலியாவில் 30 ஆண்டுகளாக பாதுகாப்பற்ற சூழ்நிலை, தலைவிரித்தாடும் வன்முறை மற்றும் அரசியல் குழப்பம் நிலவுகிறது. அரசுப் படைகளுக்கும் பயங்கரவாத குழுக்களுக்கும் இடையே நடைபெற்று வரும் சண்டையில் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# துருக்கியில் சிறை வைக்கப்பட்ட அமெரிக்கப் பாதிரியார் விடுதலை

துருக்கியில் சிறை வைக்கப்பட்ட அமெரிக்க பாதிரியார் விடுதலை செய்யப்பட்டார்.

அமெரிக்காவைச் சேர்ந்த பாதிரியார், ஆண்ட்ரூ பரன்சன், துருக்கியில் ஒரு தேவாலயத்தை நடத்தி வந்தார். ஆனால் அவர் அங்கு உள்ள குர்து இன போராளிகள் குழுவுடன் தொடர்புகள் வைத்து இருக்கிறார், உளவு வேலைகளில் ஈடுபடுகிறார் என்று கூறி, துருக்கி அரசு கைது செய்து சிறைக் காவலில் வைத்தது.

அவரை விடுதலை செய்து, அமெரிக்காவுக்குத் திருப்பி அனுப்புமாறு டிரம்ப் நிர்வாகம் கூறியும், துருக்கி அடிபணிய மறுத்தது. இதனால் இவ்விரு நாடுகள் இடையேயான உறவு பாதித்தது.

இந்த நிலையில் அவருக்கு 3 ஆண்டு சிறைத்தண்டனை விதித்து துருக்கி நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பு அளித்தது. அவர் தண்டனைக்காலத்தை ஏற்கனவே கழித்து விட்டமையால், அவரை விடுதலை செய்தும் உத்தரவிட்டது. இந்த தீர்ப்பைக் கேட்டு அவர் ஆனந்தக் கண்ணீர் சிந்தினார். மனைவி நொரினை கட்டித்தழுவி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

இதுதொடர்பாக பாதிரியார் ஆண்ட்ரூ பரன்சன் நிருபர்களிடம் பேசுகையில், “ இந்த நாளுக்காகத் தான் எனது குடும்பத்தினர் பிரார்த்தனை செய்து வந்தனர். நான் நாடு திரும்புவதில் மகிழ்ச்சி அடைகிறேன்” - எனக் குறிப்பிட்டார். தனது ஒட்டு மொத்த குடும்பமும் அமெரிக்க ஜனாதிபதி டிரம்புக்கு நன்றி கூறுவதாக அவர் தெரிவித்தார்.

விடுதலையைத் தொடர்ந்து அவர் மனைவியுடன் துருக்கியை விட்டு வெளியேறினார். பின்னர் அவர் அமெரிக்கா திரும்பினார்.

இதற்கிடையே, சின்சினாட்டியில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த டிரம்ப், பாதிரியார் ஆண்ட்ரூ பரன்சன் விடுதலைக்கு மகிழ்ச்சி தெரிவித்தார். “வாஷிங்டன் வெள்ளை மாளிகைக்கு வந்து அவர் என்னை சந்திப்பார்” என்று குறிப்பிட்டார்.

# நேபாளப் பனிப்புயலில் சிக்கி மலையேறும் 9 வீரர்கள் சாவு



காட்மாண்டு, ஒக்.15

நேபாளத்தில் மலையேறும் வீரர்கள் 9 பேர் பனிப்புயல் தாக்கி பலியாயினர்.

நேபாளத்தில் மலைச்சிகரங்களில் ஏறுவதற்காக வெளிநாடுகளில் இருந்து மலையேறும் வீரர்கள் வருவது வழக்கமாக உள்ளது.

இந்த நிலையில் அங்கு தென்கொரிய வீரர்கள் 5 பேர் சிகரம் ஏறுவதற்காக வந்திருந்தனர். அவர்கள் நேபாளத்தை சேர்ந்த 4 வழிகாட்டிகளின் உதவியுடன் சிகரம் ஏறும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

அவர்கள் 9 பேரும் தரையில் இருந்து 3 ஆயிரத்து 500 மீட்டர் உயரத்தில், குர்ஜா மலைச்சிகர அடிவாரத்தில் முகாமிட்டிருந்தனர். இந்த நிலையில் அங்கு திடீரென கடும் பனிப்புயல் வீசியது. இதில் அவர்கள் தங்கி இருந்த கூடாரம் முற்றிலும் அழிந்து விட்டது. இதில் 9 பேரும் உயிரிழந்தனர்.

இது குறித்து தகவல் அறிந்ததும் ஒரு ஹெலிக்கொப்டர் மீட்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டது. அந்த ஹெலிக்கொப்டர், பனிப்புயல் தாக்கி 8 பேர் உயிரிழந்து, சடலங்கள் கிடக்கின்றமையைக் கண்டு உறுதி செய்தது. 9 ஆவது வீரரின் உடல் கண்டுபிடிக்கப்படவில்லை.

பலியானவர்களில் தென்கொரிய வீரர்கள் அடங்கிய குழுவுக்கு தலைமை தாங்கிய கிம் சாங் ஹோவும் ஒருவர். இவர் மலையேறுவதில் சாதனையாளர் என்பது குறிப்பிடத்தக்கது. பலியானவர்களின் சடலங்களை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

# 3கோடி பயனாளர்களின் விவரங்கள் பேஸ்புக் தளத்தில் இருந்து திருட்டு

பேஸ்புக், வாட்ஸ் ஆப் போன்ற சமூகவலைத்தளங்கள் தன் பயனர்களின் அந்தரங்கங்களுக்குப் பெரிய சவாலாகத் திகழ்கின்றன. இவற்றிலிருந்து பயனாளர்களின் விவரங்கள் உலக அளவில் பெரிய அளவில் திருடப்பட்டு வருகின்றன.

இதனைத் தடுக்க பேஸ்புக் உள்ளிட்ட சமூகவலைத்தள தொழில்நுட்ப வல்லுநர்கள் பல்வேறு தடுப்பு உத்திகளை வகுத்தாலும் ஹேக்கர்கள் இவர்களை விடவும் பலே கில்லாடிகளாக இருக்கின்றனர்.


இந்நிலையில் பேஸ்புக்கிலிருந்து 3 கோடி பயனாளர்களின் பிறந்த தேதி, கல்வி, வரலாறு, மத விருப்பத் தேர்வுகள் மற்றும் பிற விவரங்கள் திருடப்பட்டுள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்கத் தேர்தல் விவகாரத்தில் பேஸ்புக்கின் பங்களிப்பு இருந்துள்ளதாக வெளியான தகவலையடுத்து பேஸ்புக் நிறுவனம் பெரும் சர்ச்சையில் சிக்கியுள்ளது. கடந்த 2016ம் ஆண்டு நடந்த அமெரிக்க அதிபர் தேர்தலின் போது, பேஸ்புக்கில் உள்ள 5 கோடி வாக்காளர்களின் தகவல்களை கேம்பிரிட்ஜ் அனாலிடிகா நிறுவனம் திருடியதாக பிரபல பிரிட்டன் தொலைக்காட்சி சேனல் நியூஸ் 4 செய்தி வெளியிட்டது.

ஒரு குறிப்பிட்ட தொழில்நுட்பத்தின் மூலம் இந்த தகவல்கள் திருடப்பட்டன எனவும், இதனை டொனால்டு டிரம்ப் அரசியல் பிரச்சாரத்தின் போது பயன்படுத்திக் கொண்டார் எனவும் குற்றம் சாட்டியது. இந்த செய்தியால், உலகம் முழுவதும் அதிக பயனாளர்களை கொண்ட பேஸ்புக் சர்ச்சையில் சிக்கியது. பேஸ்புக் நிறுவனர் மார்க் சூகர்பெர்க் தவறு நடந்து விட்டதாக அமெரிக்க நாடாளுமன்றத்திலேயே ஒப்புக் கொண்டார்.

இந்த நிலையில் தற்போது பேஸ்புக்கில் மேலும் 3 கோடி பேரின் தகவல்கள் திருடப்பட்டு உள்ளன எனத் தகவல் வெளியாகி உள்ளது.

பெயர், தொடர்பு விவரங்கள் மற்றும் ஒன்றரைக் கோடி நபர்களின் மற்ற தகவல்களை ஹேக்கர்கள் திருடினர் என பேஸ்புக்




தெரிவித்துள்ளது. மேலும் மற்றொரு 1.4 கோடி மக்களுடைய பெயர்கள் மற்றும் தொடர்பு விவரங்கள் திருட ஹேக்கர்கள் முயற்சித்து உள்ளனர்.

# திருமண நிகழ்வில் குண்டுவெடிப்பு ஆப்கானிஸ்தானில் ஐவர் மரணம்

ஆப்கானிஸ்தானில் திருமண நிகழ்வில் ஏற்பட்ட குண்டுவெடிப்பில் 5 பேர் பலியாகினர். பலர் காயமடைந்தனர்.

ஆப்கானிஸ்தானின் மேற்குப் பகுதியிலுள்ள லோகர் மாகாணத் தின் அகா மாவட்டத்தில் திருமண நிகழ்வின்போது குண்டு வெடித்தது. இதில் 5 பேர் பலியாகினர். பலர் காயமடைந்தனர். இந்தக் குண்டு வெடிப்பில் மணமகன், மணமகளுக்கு எந்தக் காயமும் ஏற்படவில்லை என்று அதிகாரிகள் தரப்பில், தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்கள் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் எனவும், பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுவதாகவும் தலைமைக் காவலர் ஷா பூர் அஹ்மத்சாய் தெரிவித்திருக்கிறார்.

இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்தத் தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. எனினும் இந்தத் தாக்குதலை தலிபான்கள் நடத்தி இருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ஓடும் ரயிலில் பெட்டியின் கூரையை வெட்டி ரூ 6 கோடியை ஏப்பமிட்டமையை எப்படி?

## இரு வருடங்களின் பின் சூத்திரதாரிகள் சிக்கினர்



சேலத்திலிருந்து சென்னைக்கு ரயில் மூலம் கொண்டுவரப்பட்ட ரிசர்வ் வங்கிப்பணம் மேற் கூரையில் துளையிட்டு ரூ. 5.75 கோடி சூறையாடப்பட்ட வழக்கில் 2 ஆண்டுகள் தீவிர முயற்சிக் குப் பின், செய்மதி உதவியுடன் துப்பு துலங்கியுள்ளது.

**கொள்ளை நடந்தது எப்படி?**

2016 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி சேலத்தி லிருந்து சென்னை வந்த ரயிலில் சேலம், நாமக்கல் மற்றும் சுற்று வட்டார பகுதியில் உள்ள தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் சேகரிக்கப்பட்ட ரூ.323 கோடி பழைய, கிழிந்த 1000 ரூபாய், 500 ரூபாய் நோட்டுகள் சென்னை ரிசர்வ் வங்கிக்குக் கொண்டுவரப்பட்டன.

சேலத்திலிருந்து இரவு 9 மணிக்கு புறப்பட்டு அதிகாலை 4-15 மணிக்கு சென்னை எழும் பூர் ரயில் நிலையம் வந்த ரயிலில் பணப்பெட்டி கொண்டு வரப்பட் டது. பெட்டியை திறந்து பார்த்த அதிகாரிகளுக்கு அதிர்ச்சி காத் திருந்தது.

**மேற்கூரையில் துளை**

ரயில் பெட்டியின் மேற்கூரை யில் துவாரமிட்டு ரூ.5 கோடியே 78 லட்சத்தை மர்ம ஆசாமிகள் சூறையாடியமை தெரிந்தது. இந்தச் சம்பவம் தொடர்பாக ரயில்வே பொலிஸார் விசாரணை நடத்தித் துப்பு துலங்காத நிலையில் சி.பி.சி.ஐ.டி. பொலி ஸாருக்கு வழக்கு விசாரணை மாற்றப்பட்டது.

அவர்களின்தடயவியல் பொலி ஸார் பெட்டியை அங்குலம் அங்குலமாக சோதித்தனர். பெட்டியின் மேற்கூரை சதுரமாக கத்தரிக்கப்பட்டு ஓர் ஆள் உள்ளே நுழையும் அளவுக்கு வெட்டப் பட்டு அதன் வழியாக ஆள்கள் நுழைந்து பணப்பெட்டிகளில் சிலவற்றை சூறையாடியமை தெரியவந்தது.

**சேலத்திலிருந்து விழுப்புரம் வரை**

மொத்தம் ஆயிரம் ரூபாய், ஐந்நூறுரூபாய்அடங்கியபழைய நோட்டுகள் சூறையாடப்பட்டிருந் தன. பொலிஸார் சேலத்திலி ருந்து சென்னை வரும் 350 கிலோ மீட்டர் தூரத்தை ஆய்வு செய்தனர். சேலத்தில் பணம் ஏற்றப்படுவதற்கு முன்னரே ரயில் பெட்டியின் மேற்கூரையை துண்டித்தார்களா? என்ற கோணத்தில் விசாரணை நடத் தப்பட்டது.

பணம் ஏற்றிய போது சேலம் சந்திப்பு ரயில் நிலையத்தில் பணியில் இருந்த ரயில் நிலைய மேலாளர் முருகேசன், பார்சல் அலுவலக ஊழியர்கள், ஓட்டு நர்கள், போர்ட்டர்கள் என 34 ஊழியர்களிடம் தனிப்படையினர் விசாரணை நடத்தினர். மேலும் ரயில் நிலையத்தில் உள்ள கண்காணிப்பு கமராவில் பதி வான காட்சிகளையும் அவர்கள் ஆய்வு செய்தனர்.

**மின்சார ரயிலாக மாறும் முன் கொள்ளை**

ரயில் பெட்டியில் பாதுகாப்பாக வந்த டி.எஸ்.பி. உள்ளிட்ட பொலி ஸாரிடமும் அவர்கள் விசாரணை நடத்தினர். ரயில் வரும் வழி யெங்கும் உள்ள இடங்களில் உள்ள கண்காணிப்பு கமரா பதிவுகளை ஆய்ந்தனர். ஆனா லும் துப்பு துலக்க முடியவில்லை. மின்சார ரயிலாக இருந்தாலும் சேலத்திலிருந்து விழுப்புரம் வரும் வரையில் அது டீசல் எஞ்சின் மூலம் இழுத்து வரப்பட்டது ஆய் வில் தெரிய வந்தது.

மின்சார ரயில் கேபிள் வரும் இடத்தில் ரயில் பெட்டியின் மேற் கூரையைபெயர்த்துஉள்நுழைய முடியாது. ஆகவே டீசல் எஞ்சின் வரும் வரையில் உள்ள பகுதி களிலேயே மேற்கூரையில் துளையிட்டு சூறையாட வாய்ப்பு இருந்திருக்கும் என பொலிஸார் சந்தேகித்தனர்.

**அம்ரேஷ் புஜாரி பொறுப்பேற்பு**

ஒரு துப்பும் கிடைக்காத நிலையில் ஓராண்டு ஓடியது. விசாரணை அதிகாரிகள் மாறி னர். அம்ரேஷ் புஜாரி புதிய ஏ.டி.ஜி. பியாக பொறுப்பேற்றார். அதன் பின்னர் அவரது உத்தரவில் இந்த வழக்கு மீண்டும் வேக மெடுத்தது. பொலிஸாருக்குப் புது யுக்தி தோன்றியது.

**இஸ்ரோ உதவி கேட்பு**

அதன்படி இஸ்ரோ அமைப்பின் செய்மதி உதவியை நாடினர் . இஸ்ரோவுக்கு தகவல் கொடுத்து உதவி கேட்டனர். குறிப்பிட்ட நாள் ,நேரம் குறித்து தகவல் கொடுத்து அதற்கான படங்களைக்கேட் டனர். இதன் மூலம் ரயில் குறிப் பாக எந்த இடத்தில் பெட்டியின் மேற்கூரை துளையிடப்பட்டது, எந்த இடத்தில் பணப்பெட்டி அபேஸ் பண்ணப்பட்டது, எதில் கொண்டுபோகப்பட்டது என்பன உள்ளிட்ட துல்லியமான படங் களைப் பெற முடியும்.

இஸ்ரோ உதவியுடன் செயற்கை கோள் படம் கிடைத்தவுடன் எங்கு வைத்துக் குறிப்பிட்ட இடத்தில் சூறையாடப்பட்டது என்ற துப்பு கிடைத்தது. அதன் பின்னர் அந்த இடத்தில் அந்த நேரத்தில் இயக் கப்பட்ட செல்போன் எண்களை சேகரித்தனர். இதன் மூலம் பத்துக்கும் மேற்பட்ட எண்கள் கிடைத்தன. அவற்றை ஆராய்ந்த போது அவை மத்திய பிரதேசம், பிஹார் மாநிலங்களைச் சேர்ந்த வர்களுடையவை எனத் தெரிய வந்தது.

**உதவிக்கு வந்த ம.பி.போலிஸ்**

பொலிஸார் நடத்திய விசா ரணையில் மத்திய பிரதேச மாநி லப் பொலிஸார் மூலம் சில தகவல்களை சேகரிக்க முடிந்தது. அதில் மத்தியபிரதேசம் குணா மாவட்டத்தைச் சேர்ந்த மோஹர் சிங் என்ற கொள்ளைக்கூட்டத் தலைவனின் ஆள்கள் இதில் ஈடுபட்டமை தெரியவந்தது

தீவிர விசாரணையில் மோஹர் சிங்கின் கூட்டாளிகளான – ரயில் அபகரிப்பில் ஈடுபட்ட – மத்திய பிரதேத்தை சேர்ந்த தினேஷ் (38), ரோஹன் பார்த்தி (29) இருவரும் சென்னைக்கு வருகின்றனர் என ரகசிய தகவல் கிடைத்தது.

**துப்பு துலங்கியது 5 பேர் கும்பல்**

இதையடுத்து சென்னை வந்தவர்களை நேற்றிரவு கைது செய்தனர். அவர்களிடம் நடத் திய விசாரணையில் மோஹர்சிங் தலைமையில் இக்குற்றத்தை செய்தமையை அவர்கள் ஒப்புக் கொண்டனர். மொத்தம் 5 பேர் கொண்ட கும்பல் இந்த அபகரிப் பில் ஈடுபட்டமையையும் ஒப்புக் கொண்டனர்.

குற்றம் நடந்த 2016 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 8 ஆம் திகதி இரவு ரயில் சின்னசேலத்தி லிருந்து விருத்தாச்சலம் நோக்கி செல்லும்போது மேற்கூரையில் அமர்ந்து பயணம் செய்த இவர் கள் மேற்கூரையை வெட்டி எடுத்து இரண்டு பேர் மட்டும் உள்ளே இறங்கி பணக்கட்டுகளை எடுத் துக்கொடுக்க அதை லுங்கியில் முடிந்துக்கொண்டு கூரையில் அமர்ந்தப்படி பயணம் செய் துள்ளனர்.

**விருத்தாச்சலத்தில் முடிந்த கொள்ளை**

ரயில் விருத்தாச்சலம் வந்த போது அங்கு தயாராக இருந்த மற்ற கூட்டாளிகளிடம் பணக் கட்டுகளை சுற்றி வைத்திருந்த லுங்கியை ஒப்படைத்துவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்று விட்டனர். மோஹர்சிங் மற்ற கூட்டாளிகள் வேறு வழக்கில் மத்திய பிரதேசத்தில் சிறையில் இருப்பதாக பிடிபட்டவர்கள் தெரி வித்ததன் அடிப்படையில் அவர் களைக் கைது செய்து சென்னை அழைத்துவர உள்ளனர்.

மோஹர்சிங் தலைமையிலான இந்த குழு பார்த்தி என்று அழைக் கப்படும் பயங்கரமான கொள் ளைக் கும்பலாகும். இவர்கள் ராஜஸ்தான், மத்தியபிரதேசம், டெல்லி, குஜராத், மஹாராஷ் டிரா, ஹரியானா மாநிலங்களில் பரவி இருப்பவர்கள் ஆவர். இவர்கள் ரயில் பாதையோரம் கூடாரம் அமைத்து பொம்மை கள். கலைப்பொருள்கள் விற் பதுபோல் நோட்டமிட்டு கொள் ளையடிக்கும் கும்பல் ஆவர்.

சூத்திரதாரிகளை திறமை யாக பிடித்ததன் மூலம் சரியாக இரண்டு ஆண்டுகள் கழித்து இந்த வழக்கு முடிவுக்கு வந்துள் ளது.

# ஐயப்பன் கோவிலுக்குள் பெண்களா? கேரளாவில் எதிர்ப்புத் தீவிரமாகிறது



திருவனந்தபுரம், ஒக்.25

சபரிமலை ஐயப்பன் கோவிலில் அனைத்து வயது பெண்களை யும் அனுமதிக்க எதிர்ப்பு தெரி வித்து கேரளாவில் நடைபெற்று வரும் போராட்டம் தீவிரம் அடைந்து வருகிறது.

கேரள மாநிலம் சபரிமலை யில் உள்ள ஐயப்பன் கோவி லுக்குச்சென்றுவழிபடஅனைத்து வயது பெண்களையும் அனும திக்கவேண்டும் என்ற. இந்திய உச்ச நீதிமன்றம் கடந்த மாதம் 28 ஆம் திகதி தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பை நடைமுறைப் படுத்தப் போவதாக கேரளாவில் ஆட்சியில் இருக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு தலைமையிலான இடதுசாரி ஜனநாயக முன்னணி அரசு அறிவித்து உள்ளது. சபரி மலை அய்யப்பன் கோவிலை நிர்வகிக்கும் திருவிதாங்கூர் தேவஸ்தான போர்டுக்கு இந்த தீர்ப்பில் உடன்பாடு இல்லை என்றபோதிலும், கோர்ட்டுதீர்ப்பை மீற முடியாது என்றும், சபரிம லைக்கு வரும் பெண்களுக்கு உரிய பாதுகாப்பு ஏற்பாடு களையும், வசதிகளையும் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப் படும் என்றும் கூறி உள்ளது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து அய்யப்ப பக்தர்கள் சங்கம் சார் பில் மேன்முறையீடு செய்யப் பட்டு உள்ளது.

தீர்ப்பை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்து வரும் கேரள அரசுக்கு எதிர்க்கட்சியான காங் கிரஸும் மற்றும் பாரதீய ஜனதா, சிவசேனா உள்ளிட்ட கட்சிகளும் கடும் எதிர்ப்பு தெரிவித்து உள் ளன. சபரிமலை ஐயப்பன் கோவி லின் பாரம்பரியத்தையும், வழி காட்டு முறைகளையும் மாற்றக் கூடாது என்று கோரி பாரதீய ஜனதா போராட்டம் நடத்தி வரு கிறது.

மேலும் பல்வேறு இந்து அமைப்புகளும் ஊர்வலம், ஆர்ப்பாட்டம் என்று பல்வேறு வகையான போராட்டங்களை நடத்தி வருகின்றன. கேரளா மட்டு மின்றி தமிழ்நாடு மற்றும் டெல் லியிலும் போராட்டங்கள் நடை பெற்று உள்ளன.

நீதிமன்றம் அனுமதித்தாலும், பாரம்பரியத்தை தாங்கள் மீறப்போவது இல்லை என்றும், கோவிலுக்கு செல்லமாட்டோம் என்றும் ஏராளமான பெண்கள் அறிவித்து உள்ளனர்.

*(10ஆம் பக்கத் தொடர்ச்சி)*

## ஆண்களுக்கும் பெண்களுக்கும்

# விட்டுக் கொடுக்கும் மனோபாவம் இருப்பின் வாழ்க்கை உவக்கும்! இனிக்கும்!

*ஸ்ரீலங்கா தமிழர் மகளிர் ஒன்றியம், கலாலயா இசை நடனப்பயிற்சி ஆகியன கடந்த சனியன்று கொழும்பில் நடத்திய வருடாந்த நவராத்திரி தின விழாவில் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு ஆற்றிய உரையின் முதல்பகுதி இது:-*

கிட்டத்தட்ட நாற்பது வருடங்கள் தொடர்ந்து நவராத்திரி காலங்களில் ஒன்பது நாட்களும் அம்பாளின் அருள் வேண்டி உணவருந்தாமல் விரதமிருந்த காலங்கள் என் வாழ்நாளில் மறக்க முடியாதன. அரசியல் அந்த நாட்களை எல்லாம் மலையேறச் செய்துவிட்டது. வயதேறிச் செல்லும் உடலின் தளர் நிலையும் விரதத்தைக் கைவிட்டமைக்கு ஒரு காரணம் எனலாம். முதலாவது வடமாகாண சபையின் பதவிக்காலம் முடிவடையும் நிலையில் என்னை அழைத்து இவ்வருட நவராத்திரி காலத்தின் போது அன்னையை நினைக்கவும், பெண்மையைப்போற்றவும் பெண்ணியம்பற்றிப்பேசவும்வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றி அறிதல்களை உங்கள் கலாலயா இசை நடனப் பள்ளியின் அதிபர் அவர்களுக்கு முதற்கண் தெரிவித்துக் கொள்கின்றேன்.

'பெண்ணியமும் கண்ணியமும்' என்பதே எனது பேச்சின் கருப்பொருள் ஆகும். இலத்தீன் மொழியில் Femina என்ற சொல் பெண் என்று பொருள்படும். Feminism என்ற ஆங்கிலச் சொல்லுக்கு Femina என்ற இலத்தீன் சொல்லே வித்தானது. Feminism என்ற ஆங்கிலச் சொல்லுக்கு அர்த்தம் பெண் உரிமைகளை முன்னிறுத்துவது அல்லது பெண்களின் மேம்பாட்டுக்கும் பெண் விடுதலைக்கும் உழைப்பது என்றாகும்.

இவ்வாங்கிலச் சொல் பெண்நிலைவாதம், மகளிரியல், பெண்நலக் கொள்கை என்ற பல தமிழ்ச் சொற்களால் குறிப்பிடப்பட்டு வந்ததெனினும் 'பெண்ணியம்' என்ற சொல்லே நடப்பில் நிலைபெற்றுவிட்டது. Feminism என்ற ஆங்கிலச் சொல்லுக்கு தமிழ் இணைச்சொல்லாக தற்பொழுது 'பெண்ணியம்' என்ற சொல்லே பாவிக்கப்படுகின்றது.

பெண்ணியம் என்பது பெண்களின் எல்லாச் சிக்கல்களையும், பிரச்சனைகளையும் புரிந்துகொண்டு அவற்றைக் களைய முற்படுவதாகும். பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவது மட்டுமல்ல இயக்கரீதியாக சமூகத்தையே மாற்றியமைக்க முயல்வதாகும். சமூகம் கொண்டிருக்கும் தப்பபிப்பிராயங்கள் பலவற்றைக் களைவதும் பெண்ணியத்தின் கடப்பாடே. பெண்ணியமானது பல்வேறு குறிக்கோள்களை உள்ளடக்கியதாக உள்ளது. அவற்றுள் சில பின்வருமாறு :-

1. அனைத்து வகைப் பெண்களுக்கும் சம உரிமை கிடைக்கப் போராடுதல்.
2. பெண்கள் தாம் மேற்கொள்ளும் அனைத்து வகை வாழ்க்கை முறைகளுக்கும் பணிகளுக்கும் உரிமை உடையவர்களாக இருக்கப் போராடுதல்;.
3. பெண்களின் உரிமைகளைப் பறித்து அவர்களைக் கட்டுப்படுத்துவனவற்றையும் அவர்களின் சுகவாழ்விற்கும் முன்னேற்றத் திற்கும் கேடுவிளைவிப்பனவற்றையும் களையப் போராடுதல்.
4. பெண்களுக்குப் போதிய விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களை ஒருங்கிணைத்து இயக்கமாக்கி தமது உரிமைகளுக்காகப் போராடச் செய்தல்.
5. பெண்களின் பொருளாதாரச் சுதந்திரத்தை நிலைநாட்டப் போராடுதல்.
6. ஆணாதிக்க அடையாளம் கண்டு அதனை அறவே களையப் போராடுதல்.
7. பெண்களின் மீதான அனைத்து வகை ஒடுக்கு முறைகளையும் இனங்கண்டு அவற்றைப் போக்குவதற்கான தீர்வுகளைப் பெறப் போராடுதல்.
8. பெண்களின் நலனைப் போற்றுதலும் அதனை அடையவும் அடைந்தவற்றைக் காக்கவும் போராடுதல்.

இவற்றைவிட வேறு பல குறிக்கோள்களும் இருக்கக்கூடும். ஆனால் மேற்கூறியவற்றை உற்றுநோக்கினால் பெண்ணியம் என்பது பொதுவாகவே போராடுவது என்று பொருள்படுகின்றது. அதாவது பெண்கள் விடுதலைக்காக, அவர்களின் நலனுக்காக, அவர்களின் உரிமைகளைப் பெறுவதற்காகப் போராடுவதே பெண்ணியம் என்று பொருள்படுகிறது.

எப்பொழுதுமே போராடுவது என்பது ஒருவித வன்மனோநிலையை உண்டு பண்ணுகின்றது. யதார்த்த நிலையை எதிர்க்கும் போது இது ஏற்படுகின்றது. A reactive state of mind என்று ஆங்கிலத்தில் கூறலாம். அதாவது பெண்கள் தமது நடைமுறை வாழ்க்கையில் குற்றங்களையும் குறைபாடுகளையும் சந்திக்கும் போது அவற்றிற்கெதிராகக் கிளர்ந்து எழும் நிலை போராட்டமாக மாறுகிறது. எதிர்ச்செயல் அல்லது எதிர்வினையே அதன் தாற்பரியம்.



தொடக்க காலத்தில் மனிதகுலம் தாய்வழிச் சமுதாயமாகவே இருந்து வந்துள்ளது. அப்போது பெண்களே குடும்பங்களை வழிநடத்தி தலைமைப் பொறுப்பில் இருந்திருக்கின்றார்கள். இவை மானுடவியல் ஆய்வாளர்களின் கருத்தாகும். பின்னர் பலதரப்பட்ட சமூக மாற்றங்களால் தாய்வழிச் சமூகம் வீழ்ச்சி கண்டது. நாடுகள் எங்கும் பெண்கள் கொடுமைகளுக்கு ஆட்படுத்தப்பட்டனர். இவ்வகையான பெண் கொடுமைகளுக்கு எதிராகப் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் உலகெங்கிலும் எதிர்ப்புக் குரல்கள் எழுந்தன.

1885ம் ஆண்டில் 'புதுமைப்பெண்' (The New Woman) என்ற பெயரில் காசீம் அமீன் என்ற எகிப்து நாட்டு சட்ட வல்லுநர் ஒரு நூல் எழுதினார். இந்நூல் மனித சமுதாயத்தில் ஒருவித விழிப்புணர்வைத் தோற்றுவித்தது.

அதே காலகட்டத்தில்த்தான் 1871 ஆம் ஆண்டில் பிரான்ஸில் Feminism என்றசொல் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கு முன்னரே பெண்களின் உரிமைக் கான இயக்கம் 1840ல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

எனவே 19ம் நூற்றாண்டின் இடைப் பகுதியில்தான் இந்த எதிர்வினை இயக்கம் (Reactive Movement) தொடங்கியது எனலாம். அதாவது பெண்களின் அன்றைய வாழ்க்கை முறையில் அவர்களின் சமூக அந்தஸ்தில் இருந்த குறைபாடுகளுக்கு எதிராக கிளர்ந்தெழுந்த ஓர் இயக்கமே பெண்ணிய இயக்கம்.

எனினும் பெண்ணியம் பற்றிப் பேசும் போது சில விடயங்கள் கவனத்திற்கெடுக்கப்பட வேண்டும். இது பெண்ணிய இயக்கத்திற்கு அப்பால் வெறுமனே பெண்ணியம் என்ற கருத்தை விளங்கிக் கொள்ளும் போது கவனிக்கப்பட வேண்டும். பெண்ணியத்தை ஒரு தண்டனை விதிக்குந் தீர்ப்பு மன்றமாக நாம் எடுத்துக் கொள்ளக்கூடாது. அது சமூகத்தின் மனச்சாட்சியாக விளங்க வேண்டும். எனவே பெண்ணியம் ஆணுக்கு எதிரானது அன்று. அது ஆணாதிக்கத்தை எதிர்ப்பதாகும். ஆண் – பெண் சம உரித்து நிலையையே பெண்ணியம் வலியுறுத்துகின்றது. பெண் ஒருவர் ஆணின் குணங்களுடன் அத்துமீறி வலம் வர வேண்டும் என்று எவரும் எதிர்பார்ப்பது இல்லை. பெண்மை பெண்களுக்கே உரிய தன்மை. ஆண்மையாக அதை மாற்ற விழைவது தவறான ஒரு சிந்தனை.

அண்மையில் சகோதரி பத்மா சோமகாந்தன் எழுதிய 'ஈழத்துத் தமிழ்ப் பெண் ஆளுமைகள்' என்ற நூலை வாசித்தேன். அதில் திருமதி இரத்தினா நவரத்தினம் பற்றி ஒரு கட்டுரை வருகின்றது. திருமதி இரத்தினா அவர்களின் கணவர் திரு. நவரத்தினத்தின் சகோதரர் திரு.சிவப்பிரகாசத்தின் மகனே என் தங்கையைத் திருமணம் செய்துள்ளார். ஆகவே எனக்குத் தெரிந்த அந்த அம்மையார் பற்றிய கட்டுரையை முதலில் வாசித்தேன். அதில் ஒரு நிகழ்வு கூறப்பட்டுள்ளது. திருமதி பத்மா சோமகாந்தன் யாழ். இந்துமகளிர் கல்லூரியில் கல்வி கற்றுக் கொண்டிருந்த காலத்தில் ஒருநாள் செல்வி இராமநாதன் ஆசிரியை கற்பித்துக் கொண்டிருந்த வகுப்பினுள் திடீர்ப் பரீட்சகர் குழு ஒன்று நுழைந்தது. அக் குழுவிற்கு அப்போது கல்வியதிகாரியாகக் கடமையாற்றிய திருமதி இரத்தினா நவரத்தினம் தலைமையேற்றிருந்தார். அவர்களைக் கண்டதும் ஆசிரியையும் மாணவியரும் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தார்களாம்.

காரணம் அக் காலத்தில் திடீர்ப் பரிசோதனைக்கு வரும் பொதுவாக ஆண் கல்வி அதிகாரிகள், முகத்தில் கோபம் கொப்பளிக்க அதிகார தோரணையுடன் உரத்த குரலில் சத்தமிட்டே பேசுவார்களாம். குற்றம் குறைகளைக் கண்டுபிடிக்கும் தோரணையிலேயே அவர்கள் தம்மை நோக்குவார்களாம். ஆனால் திருமதி இரத்தினா அதற்கு மாறான குணம் கொண்டிருந்தார் என்று சகோதரி பத்மா கூறுகின்றார். மென்மையான நடை, மலர்ந்த முகம், இனிய சுபாவம் மிக்க அன்பு ததும்பும் பேச்சு, ஆசிரியைக்கோ அல்லது மாணவியருக்கோ இருந்த குறைகளைக் கேட்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்யும் முறையிலான அவரது கலந்துரையாடல் ஆகிய அனைத்தும் பெண்மையின் ஆற்றலையும் ஆளுமையையும் வெளிக் கொண்டு வந்தது என்கின்றார் திருமதி பத்மா சோமகாந்தன். ஆகவே பெண்மையின் உயரிய தன்மை அவ்வாறே தொடர வேண்டும். ஆண்மையாக அது மாறுதல் ஆகாது.

மூன்றாவதாக பெண்ணியம் மனித சமுதாயத்தில் புரிந்துணர்வை ஏற்படுத்த விழைகிறது. இதில் ஆணுக்கும் பங்குண்டு.

நான்காவதாக பெண்ணியம் பெண்களை இழிவுபடுத்தும் போக்கினை மாற்றியமைக்கப் பாடுபடுகிறது. இதிலும் ஆணுக்கும் பங்குண்டு.

ஐந்தாவதாக பெண்ணியமானது உடல் உள ரீதியில் அடக்கப்பட்ட பெண்களின் சமூகப் பொருளாதார நிலையை அறிந்து அதற்கான மாற்று நடவடிக்கைகளை எடுக்க விழைகின்றது. இதிலும் ஆணுக்குப் பங்குண்டு.

இவ்வாறு பெண்ணியத்தின் உண்மையான தன்மை பற்றி விளக்கிக் கொண்டு போகலாம். எனினும் அதை அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள் என்றும் கூறமுடியாது. ஆனால் முக்கியமான ஒரு விடயம் எம் எல்லோராலும் கருத்துக்கு எடுக்கப்பட வேண்டும். ஓர் ஆண் ஒரு பெண்ணின் அன்பிற்கே அடிமையாகின்றான். அடாவடித்தனத்திற்கு அன்று. அவளின் அடாவடித்தனத்தை எதிர்பார்க்கும் அல்லது இரசிக்கும் ஆண், மனோநிலை பாதிக்கப்பட்டவன் என்றே கொள்ள வேண்டும். பெண்களும் அப்படித்தான். ஓர் ஆணின் அன்பிற்கே பெண் அடிமையாகின்றாள். ஆனால் அங்கு அடாவடித்தனம் நுழையும் போது தான் சிக்கல்கள் ஆரம்பமாகின்றன. அன்பில் ஆண்டான் அடிமை என்ற பேதத்திற்கு இடமில்ல. அன்பிற்கு அடிமையாவது என்பது ஆண்டானையும் அடியாளையும் சமநிலையில் இணைக்கின்றது. உண்மையில் அன்புக்கு அடிமை என்பது ஒரு பிழையான சொற்றொடர். அன்பில் அடக்கம் என்பதே அதன் அர்த்தம்.

ஆகவே அடாவடித்தனத்தை ஆண்கள் வாழ்கையிலுந்தான் பெண்கள் வாழ்க்கையிலுந்தான் தவிர்ப்பதே கண்ணியமாகும். கண்ணியம் என்ற சொல் கௌரவம் உடைய, மதிப்புடைய, மாண்புடைய என்று பொருள்படும். ஆகவே ஆண்களும் பெண்களும் மாண்புடன், மதிப்புடன், விட்டுக்கொடுக்கும் மனோபாவத்துடன் வாழப் பழகிக் கொள்ளவேண்டும். ஆணோ பெண்ணோ ஒருவர் தான்தோன்றித்தனமாக வாழத்தலைப்பட்டால், தப்பாக நடக்கத் தலைப்பட்டால், தவறாக நடக்கத் தலைப்பட்டால், திசைமாறிச் செல்ல எத்தனித்தால் அங்கு கண்ணியம் போய்விடுகின்றது.

**தான்தோன்றித்தனமாக செயற்பட்டால் கண்ணியம் போய்விடும் என்பது நிச்சயம்**

தான்தோன்றித்தனம் என்பது அகங்காரத்துடன் செயற்படுவது. அவ்வாறு செயற்படும் போது கண்ணியம் போய் விடுகின்றது, மாண்பு கலைந்து விடுகின்றது. தப்பாக நடப்பது என்பது குடும்பத்தின் எதிர்பார்ப்புக்கு மாறாக நடப்பது. தவறாக நடப்பது என்பது சமூகத்தின் எதிர்பார்ப்புக்கு எதிராகச் செயற்படுவது. திசைமாறுவது என்பது கண்ணிய வாழ்க்கைக்கு மாறாக நடக்க எத்தனிப்பது. எனவே பெண்ணியம் பற்றிச் சிந்திப்போர் இன்றைய வாழ்க்கை முறையின் சுழிவு நெளிவுகைளைப் புரிந்து கொண்டே கருத்துக்களை வெளியிட வேண்டும்.

(தொடரும்)

# அம்பாந்தோட்டைத் துறைமுகம் அருகே இலங்கைக் கடற்படையின் பாரிய முகாம்

## மிக நவீன ராடர் கருவி வசதியுடன் நாட்டின் மிகப் பெரிய தளம் அமையுமாம்

கொழும்பு,ஒக்.15

அம்பாந்தோட்டை துறைமுகத் திற்கு அருகில் பாரிய கடற்படைத் தளத்தை அமைக்கும் முயற்சி களில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. புதிய கடற்படைத் தளத்தை மிக நவீன ராடர் கருவிகளை உள் ளடக்கியதாக உருவாக்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. கொழும்பில் நடைபெற்ற சர்வ தேச மாநாடொன்றில் இலங்கை கடற்படையின் முன்னாள் தளபதி டிரவிஸ் சின்னையா இதனை உறுதிசெய்துள்ளார்.



வெளிநாட்டு இராஜதந்திரிகள், கடற்பாதுகாப்பு தொடர்பான சர்வதேச நிபுணர்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித் துள்ளார்.

அம்பாந்தோட்டைத் துறை முகம் சீனத் தளமாக விளங்கப் போகின்றது, அங்கு சீனாவின் கடற்படைக் கலங்கள் தரித்து நிற்கப்போகின்றன எனப் பெரும் ஊகங்கள் காணப்படுகின்றன. எனினும், அம்பாந்தோட்டை துறைமுகம் வர்த்தகத் துறை முகமாகவே உருவாக்கப்பட்டது. அம்பாந்தோட்டைத் துறைமுகம் சீனாவின் பொருளாதார நலன் களுடன் தொடர்புடையது என்பது வெளிப்படை.

நான் கடற்படைத் தளபதியா கப் பணியாற்றிய வேளை அம் பாந்தோட்டைத் துறைமுகத்தின் பாதுகாப்புக் குறித்து அரசாங்க மட்டத்தில் தீவிரமாக ஆராயப் பட்டது. இராணுவத்தைப் பயன் படுத்தித் துறைமுகத்தை பாது காக்க வேண்டும் என்ற எண்ண மும் காணப்பட்டது. இதன் தொடர்ச்சியாகவே புதிய கடற் படைத் தளத்தை உருவாக்கும் முயற்சிகள் இடம்பெறுகின்றன. இந்ததளம் இலங்கையில் உள்ள மிகப்பெரிய கடற்படைத் தள மாகக் காணப்படும் – எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அம்பாந்தோட்டையில் தனியான இறங்குதுறை ஒன்றும் அமையும்

கொழும்பு,ஒக்.15

அம்பாந்தோட்டை துறைமுகத்தில், இலங்கைக் கடற்படைக் கப்பல்கள் மற்றும் வெளிநாட்டுப் போர்க்கப்பல்கள் தரித்து நிற் பதற்கான, தனியான இறங்குதுறை ஒன்றை அமைப்பது குறித்து பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

அலரி மாளிகையில் 'எமது எதிர்காலத்தை வரையறை செய்யும் இந்தியப் பெருங்கடல் என்ற மாநாட்டின் இரண்டாவது நாளான, கடந்த 12ஆம் திகதி, உரையாற்றிய இலங்கைக் கடற்படையின் தலைமை அதிகாரி, றியர் அட்மிரல் பியால் டி சில்வா இந்தத் தக வலை வெளியிட்டார்.

அம்பாந்தோட்டை உள்ளிட்ட இலங்கையின் எல்லாத் துறை முகங்களிலும், அனைத்துலகக் கப்பல் மற்றும் துறைமுகப் பாதுகாப்பு வசதி உள்ளது. அதில் எந்த வேறுபாடும் இல்லை.

இலங்கையின் ஏனைய வணிகத் துறைமுகங்களில் உள்ளதைப் போலவே, இங்கும் அனைத்துலக கப்பல் மற்றும் துறைமுக பாது காப்பு வசதியை நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத் தவும் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்குள், இலங்கைக் கடற்படை




ஒரு தளத்தை அமைக்கிறது.

கடற்படைத் தளம் விரிவுபடுத்தப்படவுள்ளது. அங்கு 3.6 ஏக்கர் நிலம் உள்ளது. கடற்படைத் தளத்தை அமைக்க மேலும், 15 ஏக்கர் நிலம் தேவை. அதற்கு விரைவில் அனுமதி அளிக்கப்படும்.

இந்தத் தளத்தில் உயர் திறன் கொண்ட ராடர்கள் உள்ளிட்ட கண்காணிப்பு பொறிமுறைகள் அமைக்கப்படும்.

கடற்படைக் கப்பல்கள் மற்றும் வெளிநாட்டுக் கடற்படைக் கப்பல் களை நிறுத்துவதற்கு இன்னொரு இறங்குதுறையை அமைப்பது குறித்தும் இலங்கைக் கடற்படை பேச்சு நடத்தி வருகிறது,

துறைமுகத்துக்குள் எந்தவொரு நீர்மூழ்கியையும் அனுமதிக்க வில்லை. இதற்கு, இராஜதந்திர வழிகளின் ஊடாகவே அரசாங் கத்திடம் இருந்து அங்கீகாரத்தைப் பெற முடியும்.

தற்போது கூட, பிராந்திய நாடுகளின் வெளிநாட்டுக் கப்பல்கள் மற்றும் பிராந்தியத்துக்கு வெளியே உள்ள நாடுகளின் கடற்படைக் கப்பல்கள், அம்பாந்தோட்டைக்கு பயணம் செய்கின்றன.அதில் எந்த தடங்கல்களும் இல்லை.

தரிப்பிட வசதி உள்ள வரை, எந்தக் கப்பலும் வரலாம். ஆனால், இன்னமும் எந்தவொரு சீன கப்பலும், அம்பாந்தோட்டை துறை முகத்துக்கு வரவில்லை. – என்றும் அவர் தெரிவித்தார்.

# வேகக் கட்டுப்பாட்டை இழந்த பஸ் விபத்துக்குள்ளானதில் 8பேர் காயம்

## மடுத் திருப்பதிக்குச் சென்ற சமயம் அனர்த்தம்





பஸ் ஒன்று வவுனியா, செட்டிகுளம் பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள் ளானதில் 8 பேர் படுகாயமடைந்துள்ளனர் என செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

செட்டிகுளம், பெரியகாட்டுப் பகுதியில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

கொழும்பு, கொச்சிக்கடைப் பகுதியில் இருந்து மடுத் தேவாலயம் நோக்கிச் சென்ற பஸ்ஸே வேகக் கட்டுப்பாட்டை இழந்து செட்டிகுளம், பெரியகாட்டு 40 ஆவது மைல்கல் அருகில் உள்ள பாலத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் அந்த பஸ்ஸில் பயணித்த 8 பேர் காயமடைந்த நிலையில் செட்டிகுளம் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து செட்டிகுளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர்.

# களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படை முகாமை இடம் மாற்றி காணியைப் பிரதேச செயலகத்திடம் மீளவும் ஒப்படையுங்கள்!

## ஜனாதிபதிக்கு வியாழேந்திரன் எம்.பி. கடிதம் மூலம் கோரிக்கை

மட்டக்களப்பு,ஒக்.15

களுவாஞ்சிக்குடி நகரில் உள்ள விசேட அதிரடிப் படையின் முகாமை அகற்றி அந்த காணியை மீண் டும் பிரதேச செயலகத்திடம் வழங்க நடவடிக்கை யெடுக்குமாறு ஜனாதிபதியிடம் நாடாளுமன்ற உறுப் பினர் எஸ்.வியாழேந்திரன் கோரிக்கை விடுத்துள் ளார்.

குறித்த காணி தொடர்பாக ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவுக்கு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அவர் ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வரு மாறு:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் முக்கியத்து வம் வாய்ந்த நகரமாகவும் தமிழ் மக்களின் மிகவும் பழமைவாய்ந்த நகரமாகவும் களுவாஞ்சிக்குடி நக ரம் காணப்படுகின்றது.

தற்போதைய நிலையில் நகரமயமாக்கல் காரண மாக குறித்த நகரம் நெருக்கடியான நகரமாக மாற் றமடைந்து வருகின்றது. இந்நிலையில் நகரில் உள்ள மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயல கத்திற்கு சொந்தமான காணி கடந்த காலத்தில் விசேட அதிரடிப்படையினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அந்த காணியைமீண்டும் பிரதேச செயலகத் திற்கு பெற்றுக்கொடுப்பதன் ஊடாகக் களுவாஞ்சி குடிப் பிரதேசத்தில் எதிர்காலத்தில் இடநெருக் கடியை குறைத்துக்கொள்ளமுடியும் என பிரதேச பொது அமைப்புகள் எனது கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளன.

விசேட அதிரடிப்படையினருக்கு முகாமை அமைப் பதற்கு வேறு இடமொன்றினை தெரிவுசெய்து வழங்கி நகரில் உள்ள பிரதேச செயலகத்திற்குரிய காணியை மீண்டும் வழங்குவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை யெடுக்கவேண்டும்.

கடந்த வடக்கு, கிழக்கு மாகாண அபிவிருத்திக்கான செயலணியில் எதிர்வரும் டிசெம்பர் மாதத்திற்குள் மட் டக்களப்பு மாவட்டத்தில் படையினர் வசமுள்ள காணி கள் விடுவிக்கப்படும் என ஜனாதிபதி உறுதிமொழி அளித்துள்ளார்.

இதன்படி களுவாஞ்சிக்குடி பிரதேச செயலக காணி யையும் உள்வாங்கி விடுவிக்க நடவடிக்கையெடுக்க வேண்டும் என குறித்த கடிதத்தில் தனது கோரிக்கை யினை முன்வைத்துள்ளார்.

# அடிபணிந்து அரசியல் நடத்தவேமாட்டேன்! அமைச்சுப் பதவியையும் தூக்கி எறிவேன்!!

## மீள்குடியேற்ற செயலணி தொடர்பில் அமைச்சர் ரிஷாத் திட்டவட்டம்

முசலி, ஒக்.15

மூன்று தசாப்தகால துன்பத்திலிருந்த அகதி மக்களுக்கென, பல்வேறு பகீரத முயற்சிகளினாலும் போராட்டங்களின் மத்தியிலும் உருவாக்கப்பட்ட மீள்குடியேற்ற செயலணியின் நடவடிக்கையில் அரசாங்கம் கை வைத்தால், அதன் விளைவுகளை அனுபவிக்க வேண்டி நேரிடும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர், அமைச்சர் ரிஷாட் பதியுதீன் எச்சரிக்கை விடுத்தார்.

முசலியில் அமைக்கப்படவுள்ள 700 வீட்டுத்திட்டத்துக்கான அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

முசலி பிரதேச சபை உறுப்பினரும் அமைச்சரின் இணைப் பாளருமான பைருசின் தலைமையில் நேற்றுக் காலை மன்னார், முசலி தேசிய பாடசாலையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

அமைச்சர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியவை வருமாறு :-

நல்லாட்சி அரசாங்கத்தை உருவாக்குவதில் நாமே முன்னின்று, முழுமூச்சுடன் உயிர் அச்சுறுத்தல்களுக்கும் ஆபத்துக்களுக்கும் மத்தியிலே உழைத்தவர்கள். நல்லாட்சி அரசு உருவானதன் பின்னர், துன்பத்திலும் வேதனையிலும் வாழ்ந்த வடக்கு முஸ்லிம்மக்களைதமது சொந்தப் பிரதேசங்களில் குடியேற்றி, அவர்களுக்கு நிரந்தர விமோசனம் பெற்றுக்கொடுப்பதற்காக மீள்குடியேற்ற அமைச்சை நாம் கோரியபோது எமக்கு அது மறுக்கப்பட்டது.

"எந்த அமைச்சு வேண்டுமானாலும் கேட்டுப்பெறுங்கள். இதை மட்டும் கேட்காதீர்கள். தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு இதை உங்களுக்கு வழங்குவதில் பிரச்சினை இருக்கின்றது. ஆட்சி அமைப்பதற்கு அவர்களின் தயவும் தேவைப்படுவதனால் அதனைத் தர முடியாது" - என்று அப்போது கைவிரிக்கப்பட்டது.



அதன் பின்னர், மீள்குடியேற்ற அமைச்சுக்கு அப்போது வரவு - செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 1,400 கோடி ரூபாவில் வடக்கு முஸ்லிம்களின் நல்வாழ்வுக்கென ஆகக்குறைந்தது 14 வீடுகளையோ, 14 மலசலகூடங்களையோ கட்டிக்கொடுக்காத நிலையே இருந்தது. இதனாலேயே நாம் விழித்தெழுந்தோம்.

இந்த நிலையிலேதான் பாதிக்கப்பட்ட இந்த மக்களை மீள்குடியேற்றுவதற்காகவிசேடசெயலணி ஒன்றுக்காகப் போராடினோம். உயர்மட்ட தலைவர்களுடன் எமதுநியாயங்களைமுன்வைத்து, எத்தனையோ சந்திப்புக்களை மேற்கொண்டோம். எனது அமைச்சான கைத்தொழில் வர்த்தக அமைச்சின் மூலம் அமைச்சரவைக்கு விசேடபத்திரம் ஒன்றை சமர்ப்பித்து, தடைகளையும் சவால்களையும் தாண்டி பெறப்பட்டதே இந்தச் செயலணி. ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கமைய அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவும் இதில் அங்கம் வகிக்கின்றார்.

மீள்குடியேற்றச் செயலணியின் துரித வேகத்தையும் முனைப்பான அபிவிருத்திச் செயற்பாடுகளையும் பொறுக்க மாட்டாதவர்களே, இன்று வெந்து நொந்துபோய் அதை எம்மிடமிருந்து பிரித்தெடுக்க - பறித்தெடுக்க - வேண்டும் என்பதில் கங்கணங்கட்டி செயற்படுகின்றனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பினரையும் துணைக்கு அழைத்துக்கொண்டு, முஸ்லிம் அரசியல் வாதிகளே இந்தப் பாதகச் செயலில் இறங்கியுள்ளனர்.

முன்னரெல்லாம் மீள்குடியேற்றத்தைத் தடுத்தவர்கள் பெரும்பான்மை, பேரினத்து இனவாதிகளே. ஆனால், இப்போது அரசியல் காழ்ப்புணர்வுடன் தமது அரசியல் இருப்புக்குப் பாதிப்பு ஏற்பட்டுவிடும் என்ற அச்சத்தில், எமது பணிகளைக்கண்டுநடுங்குபவர்கள், மறைமுகமாகவும் மேடைகளிலே நேரடியாகவும் தமது செயற்பாடுகளை மேற்கொள்கின்றனர். இந்த முயற்சிகளிலே அவர்களுக்கு ஒருபோதும் வெற்றிகிடைக்கப் போவதில்லை. அநியாயங்களுக்கு இறைவனும் ஒருபோதும் துணைநிற்க மாட்டான். எமது நடவடிக்கைகளுக்கு எதிராக சதி செய்வோரையும் அபாண்டங்களைப்பரப்புவோரையும் இறைவன் ஒருபோதும் மன்னிக்கவும் போவதுமில்லை.

மீள்குடியேற்றச்செயலணியை நாம் உருவாக்கிய பின்னர், எமக்கான நிதியை முடக்குவதிலே முன்னின்று செயற்படும் அரசியல்வாதிகளையும் வைத்துக் கொண்டு, நான் தெளிவான செய்தி ஒன்றை பிரதமரிடம் தெரிவித்தேன். கைத்தொழில்வர்த்தக அமைச்சின் கீழான இந்தச் செயலணியை பறித்தெடுத்தால், எனது அமைச்சை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். நான் வெறுமனே நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்படுகின்றேன் என்று மிகவும் ஆணித்தரமாகக் கூறினேன். எவருக்கும் பயந்து நாங்கள் கடந்த காலங்களில் அரசியல் செய்தவர்களும் அல்லர். இனியும் அவ்வாறு அடங்கி அரசியல் செய்யவும் மாட்டோம் என்பதை, மிகவும் தெளிவாக இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

இடம்பெயர்ந்த மக்கள் நிம்மதியாக வாழ வேண்டும் என்பதற்காக, ஒரு நீண்டகால இலக்குடன் பயணிக்கின்றோம். தேர்தலுக்காக மட்டும் இங்கு வந்து அற்ப ஆசைகளைக் காட்டி, அவ்வப்போது அரசியல் செய்யும் ஏமாற்றுக் கலாச்சாரம் எம்மிடம் என்றுமே இருந்ததில்லை. அகதி முஸ்லிம் மக்களின் வரலாற்றிலே வரவு - செலவு திட்டத்திலே அவர்களின் நல்வாழ்வுக்கென, மீள்குடியேற்றத்துக்கென பிரத்தியேகமாக நிதி ஒதுக்கப்பட்டதில்லை. கடந்த வரவு - செலவு திட்டத்திலேதான் கைத்தொழில் அமைச்சுக்குக்கீழான இந்த மீள்குடியேற்றச் செயலணிக்கு இவ்வளவு தொகையான நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

கைத்தொழில் அமைச்சராக இருந்துகொண்டும், இந்த மக்களின் வலியை அவர்களுடன் சேர்ந்து அனுபவித்தவன் என்ற வகையில், மீள்குடியேற்றப் பணிகளையும் செயற்படுத்தி வருகின்றேன். - என்று அமைச்சர் கூறினார்.

இந்த நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் அலிகான் ரீப், வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும், அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளருமான ரிப்கான் பதியுதீன், முசலி பிரதேச சபைத் தவிசாளர் சுபியான், பிரதித் தவிசாளர் முகுசீன் றயீசுத்தீன், மன்னார் பிரதேச சபைத் தவிசாளர் முஜாஹிர், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வடமாகாண பணிப்பாளர் முனவ்வர், மீள்குடியேற்ற செயலணியின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் முஜீபுர் றஹ்மான் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச அமைப்பாளர்கள், மக்கள் காங்கிரஸின் முக்கியஸ்தர்கள், ஊர்ப்பிரமுகர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றிருந்தனர்.

### ஐயப்பன்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், ஐப்பசி மாத பூஜைக்காக சபரிமலை ஐயப்பன் கோவில் நாளமறுதினம் 17 ஆம் திகதி (புதன்கிழமை) திறக்கப்படுகிறது.

நீதிமன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து, சபரிமலையில் பெண்களுக்கு தேவையான வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும் என்று கேரள அரசு கூறி இருப்பதால், நடை திறக்க இருப்பதையொட்டி அங்கு பெண்கள் வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் கேரளாவில் போராட்டம் நாளுக்கு நாள் தீவிரம் அடைந்து வருகிறது.

நேற்று முன்தினம் கொச்சியில் சிவசேனா சார்பில் ஊர்வலம் நடைபெற்றது. இதில் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டனர். ஊர்வலத்தில் சென்றவர்கள் சபரிமலையை பாதுகாப்போம் என்றும், ஐயப்பன் கோவிலின் புனிதத்தையும், பாரம்பரியத்தையும் மத்திய-மாநில அரசுகள் பாதுகாக்க வேண்டும் என்று வற்புறுத்தியும் கோஷங்களை எழுப்பினார்கள்.

பேரணியின் போது சிவசேனா பிரமுகர் பெரிங்கமலா அஜி கூறுகையில், தங்கள் கட்சியைச் சேர்ந்த தற்கொலைப்படை பெண்கள் 17 ஆம் திகதியும், 18 ஆம் திகதியும் பம்பை நதி பகுதியில் கூடுவார்கள் என்றும், இளம் பெண்கள் யாராவது சபரிமலை கோவிலுக்கு செல்ல முயன்றால் அங்கு கூடி இருக்கும் தங்கள் கட்சி பெண்கள் தற்கொலை செய்து கொள்வார்கள் என்றும் மிரட்டல் விடுத்தார்.



இதற்கிடையே, சபரிமலை கோவிலில் பெண்களை அனுமதிப்பதற்கு எதிராக பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகள் கேரளாவில் நடத்தும் நீண்டதூர பேரணி நேற்று கொல்லம் மாவட்டத்துக்கு வந்தது.

பேரணிக்குத் தலைமை தாங்கி வந்த மாநில பாரதீய ஜனதா தலைவர் பி.எஸ்.ஸ்ரீதரன்பிள்ளை பேசுகையில், சபரிமலை கோவிலுக்குள் மகளிர் செல்லப்போகின்றனர் எனக் கூறி இருப்பதற்குக் கடும் கண்டனம் தெரிவித்தார். எரியும் நெருப்பில் எண்ணெய் விட வேண்டாம் என்றும், சபரிமலையை பதற்றம் நிறைந்த பகுதியாக மாற்ற வேண்டாம் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

# கூட்டு எதிரணியின் வேட்பாளரை அறிய ஐ.தே.கட்சியினருக்கே அதிக ஆர்வம்!

## இரு தேர்தல்களில் தனது தலைவரையே நிறுத்தாத கட்சி என்கிறார் கோட்டா

கொழும்பு, ஒக்.15

கூட்டு எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது குறித்த இறுதி முடிவை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே எடுப்பார் என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கொடகமவில் இடம்பெற்ற தமது 'எலிய' அமைப்பின் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கூட்டு எதிரணியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது குறித்து அறிந்து கொள்வதற்கு ஐக்கிய தேசிய கட்சியே அதிக ஆர்வத்துடன் உள்ளது.

ஐக்கிய தேசிய கட்சி கடந்த இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களில் தனது தலைவர் போட்டி போடுவதற்கு அனுமதிக்காத கட்சி. ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது குறித்துக் கவலைப்படாமல் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறுவதற்கான உரிய சரியான தந்திரோபாயங்களை கூட்டு எதிரணி முன்வைக்க வேண்டும்.

நாங்கள் உரிய தந்திரோபாயங்களை முன்வைத்தால் எதிர்தரப்பு வேட்பாளர் யாராகயிருந்தாலும் நாங்கள் நிச்சயம் வெற்றி பெறுவோம். - என்றார் கோட்டாபய.

இதேவேளை இந்த நிகழ்வில் உரையாற்றிய முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்த்தன கோட்டாபய ராஜபக்ஷவையே ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்த வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

## உரிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளை மறுதினம் ஜனாதிபதியுடன் நடைபெறவுள்ள கலந்துரையாடலின் பின்னர் தீர்க்கமான முடிவுகளைக் கூட்டமைப்பு எடுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் உத்தியோக பூர்வப் பணி நடமாடும் சேவையின் பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட நிகழ்வு பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நேற்று நடந்தது. இதில் விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சிறைகளில் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் எங்கள் கட்சி ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசியிருக்கின்றது. அதன்போது நீதிகோரி நிற்கும் கைதிகளைப் மன்னிப்பளித்துவிடுதலைசெய்யப்பட வேண்டுமென்று கோரியுள்ளது. கைதிகள் விடுதலை தொடர்பில் நாங்கள் கோரிக்கை விடுத்து உரிய நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றோம்.

கைதிகள் முன்னெடுத்து வரும் போராட்டத்தை நிறுத்துமாறு பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட பல தரப்பினர்களும் கேட்டிருந்த நிலையில் நாமும் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடி இருந்தோம். இதன் போது மனம் விட்டுக் கலந்துரையாடி போராட்டத்தை ஒத்திவைக்கத் தாம் இணங்குகின்றனர் என எம்மிடம் அவர்கள் கூறியிருந்தனர்.

வரவு – செலவுத் திட்டத்தை எதிர்க்கவேண்டுமென்றும் கைதிகள் எம்மிடம் கேட்டிருந்தனர். நாம் வரவு – செலவுத் திட்டத்தை எதிர்க்கவேண்டுமென்று இங்கு பலரும் கூக்குரல் கொடுக்கின்றார்கள்.

ஆனால் இவர்கள் சொல்வதற்கு முன்னரே இந்த அரசுக்கு நாங்கள் தொடர்ச்சியாக ஆதரவளிக்க வேண்டுமா இல்லையா என்பதைச் சென்ற நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலும் கூட நாம் ஆராய்ந்திருக்கின்றோம். இது தனியே கைதிகள் விடயப் பிரச்சினை மட்டுமல்ல. நிலப் பிரச்சினை, காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினை, இனப் பிரச்சினை உள்ளிட்ட பல பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டியிருக்கின்றது.

நாம் ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடியதை சிறையிலுள்ளவர்களுக்குச் சொன்னோம். அத்தோடு எதிர்வரும் 17ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக்குழுக்கூட்டம் உள்ளது. அதற்கு நாங்களும் அழைக்கப்பட்டுள்ளோம். அங்கே திட்டவட்டமான தீர்மானத்தைக் கைதிகள் சார்பிலும் எடுப்போம் என்று தெரிவித்தோம். தீர்க்கமான முடிவை எடுக்க உள்ளதாக நாம் கூறிய நம்பிக்கையின் நிமித்தம் தான் போராட்டத்தை ஒத்திவைப்பதாகக் கைதிகள் சொல்லியிருக்கின்றார்கள். நாங்களும் அதற்கு உடன்பட்டுள்ளோம்.

ஆயினும் அன்றைய கூட்டத்தின் முடிவில் எடுக்கப்படும் தீர்மானங்கள் ஏதும் எங்களுக்குப் பொருத்தமில்லாது இருந்தால் அடுத்த கட்டம் என்னவாக இருக்குமென்று உங்களிடம் பேசுவோம் என்று நான் குறிப்பிட்டிருக்கின்றேன். அவ்வாளவு தான் இடம்பெற்றிருக்கிறது.

கைதிகள் விடுவிப்பு நடைபெறாவிட்டால் நாங்கள் பட்ஜெட்டை எதிர்ப்போம் எனச்செய்திகள் வெளியாகியுள்ளன. அப்படி நடக்கலாம்.

அரசியல் கைதிகள் விடுதலை, நில விடுவிப்பு உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்க தீர்வைக் காண வேண்டியுள்ளது.

இந்த நாட்டில் பலரைத் தொடர்ச்சியாகத் தடுத்து வைத்திருப்பது பயங்கரவாதத் தடைச்சட்டம் தான். அந்தச் சட்டம் மீளப் பெறப்படுமென்று அரசு வாக்குறுதிகளை வழங்கியிருக்கின்றது. அற்கமைய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அதனை விடுத்து அந்தச் சட்டத்தை நீக்கிவிட்டு அதற்கு மாற்றாக இன்னொரு சட்டத்தை கொண்டு வரத் தேவையில்லை. – என்றார். (ஐ-07)

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கடந்த 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம், மானிப்பாய் மற்றும் சுன்னாகம் பொலிஸ் பிரிவுகளில் பொலிஸ் சுற்றுக்காவல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இந்த நிலையில் நேற்று அவற்றுடன் கோப்பாய் பொலிஸ் பிரிவையும் இணைத்து 4 பொலிஸ் பிரிவுகளில் இந்தச் சுற்றுக்காவல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

வாள்வெட்டுவன்முறைகளில் ஈடுபடுவோர் மற்றும் நீதிமன்றங்களால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு தேடப்படுபவர்களை இலக்காக வைத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதில் பொலிஸாரால் தேடப்பட்டவர்கள் 7 பேர், நீதிமன்றங்களால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் 7 பேர், வன்முறைகளில் ஈடுபட்டவர்கள் என சந்தேகிக்கப்படும் 10 பேர் என மொத்தம் 41 பேர் கைது செய்யப்பட்டனர்.

மேலும் வீதிப் போக்குவரத்து விதிமுறைகளை மீறியவர்கள் என்ற குற்றச்சாட்டில் 151பேருக்கு எதிராக சட்டநடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-07)

## மகனைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொலையைச் செய்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் சந்திரராசா விஜயகுமாரி (வயது–58) என்ற குடும்பப் பெண்ணே கொலை செய்யப்பட்டார். அவரது மகன் காயமடைந்தார்.

“நேற்று ஞாயிற்றுக்கிழமை வீதியில் சென்ற என்னுடன் சிலர் முரண்பட்டுக்கொண்டனர். அவர்கள் மேலும் சிலருடன் 8 பேராக எனது வீட்டுக்கு வந்தனர். அவர்கள் மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டிகளில் வந்தனர்.

“கையில் பொல்லுகள் மற்றும் கம்பிகளுடன் வந்த அவர்கள் என்னைத் தாக்கினார்கள். அவர்கள் என்னைத்தாக்குவதை அம்மா தடுத்தார். அப்போது அம்மாவின் தலையில் பொல்லு மற்றும் கம்பியால் அவர்கள் தாக்கினார். அம்மா என் முன்னிலையில் துடிதுடித்து உயிரிழந்தார்.” – என்று மகன் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தால் அந்தப் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

உயிரிழந்த குடும்பப் பெண்ணின் சடலம் தெல்லிப்பளை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ-07)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.

சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு மற்றும் அரசியல் கைதிகளின் உறவினர்கள் இணைந்து ஏற்பாடு செய்த இந்த கவனவீர்ப்புப் போராட்டம் நேற்றுக் காலை யாழ்ப்பாணம், நாவாந்துறைச் சந்தைப் பகுதியில் இடம்பெற்றது.

சகல தமிழ் அரசியல் கைதிகளையும் பொதுமன்னிப்பு வழங்குவதன் மூலமோ அல்லது குறுகிய புனர்வாழ்வு வழங்கியோ விடுவிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

அத்துடன் தமிழ் அரசியல் பிரதிநிதிகள் கைதிகளுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமைவாக வரும் வரவு – செலவுத்திட்டத்தைப் பயன்படுத்துவதுடன் ஏனைய முஸ்லிம் மற்றும் பெரும்பான்மை இன நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதில் தமிழர் தரப்புக்கு ஆதரவு வழங்கவேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தினர்.




யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் இந்த கவனவீர்ப்பில் கலந்துகொண்டனர். (ஐ-07)

## பட்ஜெட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அரசியல் கைதிகளின் விடுவிப்புக்காக, வரவு – செலவுத் திட்டத்தைக் கூட்டமைப்பு பேரம் பேசும் சக்தியாகப் பயன்படுத்த வேண்டும் என்று சிவில் அமைப்புக்கள் தெரிவித்துள்ள கருத்துத் தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எதிர்வரும் புதன்கிழமை அரசியல் கைதிகளின் விடுவிப்புத் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் பேச்சு நடத்தவுள்ளோம். அந்தப் பேச்சின் முடிவுகள் எவ்வாறு அமையும் என்பது தெரியாது. அதன் பின்னரே, வரவு – செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் நாம் முடிவெடுப்போம் – என்றார். (ஐ)

## உடுவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், மானிப்பாய் பொலிஸ் பிரிவுகளில் அண்மைக் காலமாக முன்னெடுக்கப்பட்ட வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய – உடுவில் பகுதியில் வசிக்கும் – இளைஞன் ஒருவர் தொடர்பில் சிறப்பு அதிரடிப்படையினருக்குத் தகவல் கிடைத்தது.

அதுதொடர்பில் இளைஞனின் வீடு சிறப்பு அதிரடிப்படையினரால் நேற்று அதிகாலை சோதனையிடப்பட்டது. அதன் போது வீட்டுக்குள் மறைத்துவைக்கப்பட்டிருந்த வாள் ஒன்று மீட்கப்பட்டது.

அதனைவீட்டுக்குள் மறைத்து வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவருக்கு 2014 ஆம் ஆண்டு தொடக்கம் வாள்வெட்டு வன்முறை தொடர்பான குற்றச்சாட்டுக்களில் வழக்குகள் உள்ளன.

இறுதியாக 2017ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நீதிமன்றப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். ஆவா குழுவைச் சேர்ந்த இவர், வாள்வெட்டு வன்முறைகளில் ஈடுபடுவோரில் முக்கியமானவர். சந்தேகநபர் சிறப்பு அதிரடிப் படையினரால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, சந்தேகநபர் சுன்னாகம் பொலிஸாரின் கண்காணிப்பில் இருந்தபோதும், அவரைக் கைது செய்யவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-07)

## சட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் நோக்கம் தொடர்பில் நாட்டு மக்களுக்கு அக்கட்சி தற்போது தெளிவுபடுத்திவருகின்றது.

இதன் மற்றுமொரு நிகழ்வு நேற்று மத்துகமவில் நளிந்த ஜயதிஸ்ஸ எம்.பி. தலைமையில் நடைபெற்றது.

வீதி, வீதியாகச்சென்று மக்களுக்கு கையேடுகளை விநியோகித்தனர். நடைபவனியாகச் சென்றவர்கள், வாழ்க்கைச்சுமை அதிகரிப்பைக் கண்டிக்கும் வகையில் சமையல் பாத்திரங்காளோடு வீதிக்கு இறங்கித்தமது எதிர்ப்பை வித்தியாசமாக வெளிப்படுத்தினர்.

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று கூட்டுஎதிரணி எம்.பியான ரஞ்சித் டி சொய்சா சபதமிட்டுள்ளார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் நடைபெற்ற மக்கள் கூட்டமொன்றில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு சபதமெடுத்தார்.

2020 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம்வரை ஆட்சியைக்கவிழ்க்க முடியாது என மஹிந்த அமரவீர ஆருடம் கூறியுள்ளார். ஆனால், அதற்கு முன்னர் நிச்சயம் ஆட்சியைக் கவிழ்ப்போம்.

ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவும், பிரதமராக மஹிந்தவும் வருவதற்கு இடைக்கால அரசு வேண்டும் என சிலர் கூறுகின்றனர். அப்படியொரு நிலை ஏற்படவேகூடாது.

அதுமட்டுமல்ல, 2020 இலும் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்குவார் என்றும், மஹிந்தவின் ஆதரவைப் பெற்ற ஒருவர் பிரதமராக களமிறங்குவார் என்றும் கூறப்படுகின்றது. அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அலுவலகத்துக்கு முன்னாலுள்ள மாங்காய் மரத்தில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொள்வேன் – என்றார் ரஞ்சித் டி சொய்சா.

## மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சங்கத்தின் தலைவர் நஜின் சுமனசேன தெரிவித்தார்.

எனவே, வீட்டையும், வீட்டு வளாகத்தையும் சுத்தமாகவும், நீர்த்தேங்கிநிற்காத வகையிலும் வைத்துகொள்ளுமாறு மக்கள் கோரப்பட்டுள்ளனர்.

அதேவேளை, நாடு முழுவதிலும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு டெங்கு ஒழிப்பு பிரிவு தீர்மானித்துள்ளது. இவ் வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் டெங்கு காய்ச்சலால், 39 ஆயிரத்து 793 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இரண்டு நாள்களுக்குமேல் காய்ச்சல் அல்லது உடம்பு வலி நீடிக்குமானால் வைத்திய ஆலோசனையை கட்டாயம் பெறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

## பதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜயசுந்தர பதவி விலகிய பின்னர், மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்திலும், மைத்திரிபால சிறிசேன பதவிக்கு வந்த பின்னரும், ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் தலைவராகப் பணியாற்றிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் எஸ்.எம்.விக்ரமசிங்க புதிய பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்படவுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் எஸ்.எம்.விக்ரமசிங்க 12 ஆண்டுகளாக, ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் தலைவராகப் பணியாற்றியவராவார்.

பூஜித் ஜயசுந்தரவும், எஸ்.எம்.விக்ரமசிங்கவும், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களாக, 1985ஆம் ஆண்டு பொலிஸ் சேவையில் இணைந்துகொண்டனர்.

பொலிஸ்மா அதிபர் இலங்ககோனின் பதவிக்காலம் முடிந்தபோது, பூஜித் ஜயசுந்தர, எஸ்.எம்.விக்ரமசிங்க உள்ளிட்ட மூன்று மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், அந்தப் பதவிக்கு நியமிக்கப்படும் தகுதியைப் பெற்றிருந்தனர்.

அரசமைப்புச் சபையில் இது குறித்து விவாதிக்கப்பட்டு இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அப்போது சபாநாயகரும், அரசமைப்புச் சபையின் தலைவருமான கரு ஜயசூரிய வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

வாக்களிப்பில் பங்கேற்ற 7 உறுப்பினர்களில், 5 பேர் பூஜித் ஜயசுந்தரவுக்கு ஆதரவாகவும், ஒருவர் எஸ்.எம்.விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகவும் வாக்களித்தனர். ஒரு வாக்கு நிராகரிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தமிழ் அரசியல் கைதிகளின் உடன் விடுதலையை வலியுறுத்தி பிரிட்டனிலும் நேற்றுப் போராட்டம்




அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி பிரித்தானியாவில் உள்ள இலங்கை தூதரகம் முன்பாக நேற்றுப் போராட்டம்நடைபெற்றது.

இலங்கையின் எந்த விதமான விசாரணைகளுமின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலையை வலியுறுத்தி தொடர் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இவர்களது போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் அவர்களை விடுவிக்க வலியுறுத்தியும் வடக்கில் பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் இதேவேளையில் பிரித்தானியாவிலுள்ள தமிழர் தோழமை இயக்கம் (Tamil Solidarity) மற்றும் சம உரிமை இயக்கம் (Movement For Equal Rights) அமைப்புக்களின் ஒன்றிணைந்த ஏற்பாட்டில் பிரித்தானியாவிலுள்ள இலங்கை தூதரகத்திற்கு முன்பாக நேற்று நண்பகல் 1.00 மணியளவில் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றுள்ளது.

பயங்கரவாதத் தடை சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையிலிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் . இராணுவம் நிலை கொண்டிருக்கும் எமது மக்களின் நிலங்களை மீள கையளிக்க வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினைக்கு விரைவாக தீர்வு வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளுடன் நடைபெற்ற இப்போராட்டத்தில் பெருமளவிலான மக்கள் கலந்து கொண்டு இலங்கை அரசினுடைய மெத்தனப்போக்கை கண்டித்துக் கோஷங்களை எழுப்பினர்.

இந்த போராட்டத்தை ஒருங்கிணைத்திருந்த தமிழர் தோழமை இயக்கத்தின் உறுப்பினர் நுஜிதன் இராசேந்திரம் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் –

அரசியல் கைதிகளாக இருக்கும் எமது உறவுகளை எந்த வித நிபந்தனையுமின்றி உடனடியாக விடுவிக்கக் கோரும் முகமாகவே போராட்டத்தினை முன்னெடுத்திருக்கின்றோம். எமக்காக போராடியதற்காக எந்த விதமான விசாரணைகளுமின்றி 10 ஆண்டுகளிற்கு மேலாக சிறை வைக்கப்பட்டு, இன்று சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கும் எமது முன்னாள் போராளிகளிற்காகவும், நாம் இணைந்து போராட வேண்டிய காலம் இது. பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைதான அனைவரையும் அரசியல் கைதிகளாக ஏற்க வேண்டும்.இலங்கையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டமே பயங்கரமானது என்பதை உலக நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன. இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றுமாறு ஐக்கிய நாடுகள் சபை கோரியுள்ளது. அதனை உடனடியாக விலக்க வேண்டும். – என்றார்.

## பெண்ணுக்குப் பாலியல் தொல்லை; குடும்பத் தலைவர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஒக். 15

அயலில் வசிக்கும் பெண் ஒருவருக்கு தனது அந்தரங்க உறுப்பைக் காண்பித்து தொல்லை கொடுத்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட குடும்பத் தலைவர் ஒருவர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், பொம்மைவெளிப் பகுதி நீர் விநியோகக் குழாயில் குடிதண்ணீர் எடுப்பதில் தமிழ் மற்றும் முஸ்லிம் குடும்பங்களுக்கு இடையே முறுகல் நிலை ஏற்பட்டது. இரு தரப்பினருக்கும் இடையே பிரச்சினை நீடித்ததால், யாழ்ப்பாணம்பொலிஸ்நிலையத்தில்முறைப்பாடு வழங்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், இரு தரப்பினரும் இணக்கத்துக்கு வராததால், கடந்த செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். முஸ்லிம் தரப்பில் 3 பெண்களும் தமிழ் தரப்பில் 3 பெண்கள் 2 ஆண்களும் பொலிஸாரால் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இரு தரப்பினரும் மோதிக்கொண்டால், இந்த விடயம் பாரதூர விளைவை ஏற்படுத்தும் எனச் சுட்டிக்காட்டிய யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன், அவர்களை இணக்கத்துக்குச் செல்லுமாறு அறிவுறுத்தினார்.

நீதிவானின் அறிவுறுத்தலை ஏற்ற அவர்கள் இணக்கத்துக்குச் சென்றனர். அதனால் இரு தரப்பையும் சேர்ந்த 8 பேருக்கும் நீதிமன்றம் பிணை வழங்கி விடுவித்தது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய முஸ்லிம் குடும்பத்தலைவர் ஒருவருக்கு எதிராகப் பாலியல் ரீதியான தொல்லை கொடுத்தார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர்.

குடிதண்ணீர் எடுப்பதில் நீடித்த முரண்பாட்டின் போது, அயலில் வசிக்கும் தமிழ் பெண் ஒருவருக்கு சந்தேகநபர் தனது ஆடையைக் களைந்து தனது அந்தரங்க உறுப்பைக் காண்பித்துப் பாலியல் ரீதியான தொல்லையைக் கொடுத்தார் என்று பொலிஸார் மன்றில் சமர்ப்பணம் செய்தனர்.

பொலிஸாரின் விண்ணப்பத்தை ஆராய்ந்த நீதிவான், சந்தேகநபரை எதிர்வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ஐ-7)

## வாள்வெட்டுக் குழுக்களை இலக்குவைத்து யாழ். குடாநாட்டில் தொடர்கிறது சோதனை



வாள்வெட்டு மற்றும் வன்முறைகளுடன் தொடர்புடைய குழுக்களை இலக்கு வைத்து யாழ்.குடாநாட்டின் நகரப் பகுதி மற்றும் நகரை அண்டிய கொக்குவில், திருநெல்வேலி பகுதிகளில் வீதிச் சோதனை மற்றும் திடீர்ச் சுற்றிவளைப்புக்களை பொலி ஸார் மேற்கொண்டுள்ளனர்.

வாள்வெட்டுக் குழுக்களுடன் தொடர்புடைய முக்கிய வன்முறையாளர்களை இலக்கு வைத்துக் கடந்த வாரம் கொக்குவில் பகுதியில் பொலிஸார் திடீர்ச் சுற்றிவளைப்பை மேற்கொண்டிருந்தனர். இதனை அடுத்து நேற்றும் பல இடங்களிலும் இந்தத் திடீர்ச் சோதனை இடம்பெற்றது.

காங்கேசந்துறை வீதி, பலாலி வீதி, மற்றும் மானிப்பாய் வீதி ஆகியவற்றில் 500 மீற்றருக்கு ஒரு இடத்தில் வீதித் தடைகள் போடப்பட்டு ஒவ்வொரு இடங்களிலும் 20ற்கும் மேற்பட்ட பொலிஸார் நிறுத்தப்பட்டு வாகனங்கள் சோதனையிடப்பட்டன.

# அறிவின் துணையுடன் அகக் கண்களை விரிப்போம்!

## இன்று சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை ஒட்டி ‘வாழ்வகம்’ தலைவர் உடன் பிறந்தவர்களுக்குச் செய்தி




இன்று சர்வதேச வெண்பிரம்பு தினம். அதனை ஒட்டி யாழ்ப்பாணம் ‘வாழ்வகம்’ அமைப்பின் தலைவர் இரவீந்திரன், தமது விழிப்புல வலுவிழந்த உடன் பிறந்தோருக்கு செய்தி ஒன்றை விடுத்துள்ளார். அதில் அவர் கூறியிருப்பவை வருமாறு:–

உலகெங்கிலும் பரந்து வாழும் விழிப்புல வலுவிழந்த உடன் பிறப்புக்களே, இன்று சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினமாகும். வழமை போல இம்முறையும் உங்களோடு உரையாடுவதற்கான இந்த உன்னத வாய்ப்பினை வழங்கிய ஊடகத்துக்கு முதற்கண் எனது உளமார்ந்த நன்றிகளை உரித்தாக்கிக்கொள்ளுகின்றேன். சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினமானது இரு நோக்கங்களுக்காக அனுட்டிக்கப்படுகின்றது. வெள்ளைப் பிரம்பு பற்றியும் அதன் தாற்பரியங்கள் பற்றியும் அதற்கு மதிப்பளிப்பது பற்றியும் பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டுவதன்மூலம் வெள்ளைப் பிரம்பைத் தாங்கிச் செல்பவர்களுக்கு பாதுகாப்பையும் உதவிகளையும் பெற்றுக்கொடுத்தல் முதலாவது நோக்கமாகும். இரண்டாவது நோக்கம் விழிப்புல வலுவிழந்தோரின் தகைமைகள், திறமைகளை வெளிக்கொணர்தலும் அவர்கள் தொடர்பாக சமூகத்திலே நிலவுகின்ற அறியாமைகளுக்கு ஆப்பு வைப்பதுமாகும்.

உங்கள்திறமைகள்,தகைமைகளைவெளிக்கொணர்வது அல்லது மேம்படுத்திக்கொள்வதென்பது உங்கள் கரங்களில்தான் தங்கியிருக்கின்றது. நீங்கள் முயலாதிருக்கும் வரை வேறு எவர் முயற்சித்தும் பயனேதும் ஏற்படப் போவதில்லை என்பதை ஒருபோதும் மறந்துவிடாதீர்கள். உங்களைநீங்கள்உயர்த்திக்கொள்ளுகின்றஅதேவேளை, எவ்வித வசதி வாய்ப்புக்களும் அற்ற நிலையில் வாடிக் கொண்டிருக்கும்உங்களையொத்தஉறவுகளைக்கைதூக்கி விடவேண்டிய பொறுப்பும் கடமையும் உங்களுக்குண்டு என்பதையும் ஒருபோதும் மறந்துவிடாதீர்கள்.

நட்சத்திரங்களை நோக்கிக் குறிவையுங்கள். குறைந்தபட்சம் ஒரு தென்னை மர உயரத்துக்காவது உங்களால் உயர முடியும் என்ற முது மொழியை மனதிருத்தி கடுமையாய் உழையுங்கள். கடுமையாய்ப் பாடுபடுங்கள். நிச்சயம் உங்களாலும் சாதிக்க முடியும். சாதித்தே தீரவேண்டும் என்ற மனோ திடத்தோடு இருப்பவர்கள் முன்னால் சவால்கள் யாவும் மண்டியிடும்.

இன்று நாம் ஓர் அறிவு சார் யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அறிவேவளம், அறிவேபலம், அறிவே அனைத்தும் என்பதே இன்றைய நவீன யுகத்தின் சித்தாந்தமாக உள்ளது. எனவே, உங்கள் அறிவுப் பரப்பை விசாலிப்பதற்கு எப்போதும் முயற்சித்துக்கொண்டேயிருங்கள். அறிவின் துணையுடன் உங்கள் அகக் கண்கள் விரிந்துகொள்கின்றபோது உங்களைச் சூழ உள்ள புற இருள் தானாகவே விலகிவிடும். அப்போது தடைக் கற்கள் யாவும் படிக் கற்களாகும். நிச்சயமாக உங்கள் வாழ்வு வளம்பெறும்.

அனைவருக்கும் என் இதயம் நிறைந்த வெண்பிரம்பு தின வாழ்த்துக்கள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.10.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.